உ

சிவமயம்

கண்டாவளைக் கவிராயர்
சி.கு.இராசையா
"அமுதகிரி"
முரசுமோட்டை.

# கோபுர வாயில்

## கண்டாவளைக் கவிராயர்
திருவாரங்கள்

வெளியீடு :-

குருகுலப் புலவர் வட்டம்

கிளிநொச்சி. (இலங்கை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| TITLE | :- | "KOPUTA VAAYL"<br>KANDAVALAI KAVIRAYAR |
| SUBJECT | :- | THIRU VATANKAL |
| AUTHOR | :- | KANDAVALAI KAVIRAYAR<br>SITHARK RASIAH<br>"AMUTHA SURABI"<br>MURASUMODDAI<br>(CEYLON) |
| PRESENT ADDRESS | :- | "THILLAIVANAM"<br>VIYASAR VEETHI<br>THONIKKAL, VAVUNIYA |
| FIRST EDITION | :- | PUTADDATHI NAVARATHIRI 1999 |
| PRINTERS | :- | S. THAMBI COMPUTER WORKS<br>STATION ROAD, VAVUNIYA |
| PUBLISHERS | :- | KURUKULAM PULAVAR VADDAM<br>KILINOCHCHI |
| COPYRIGHT | :- | Mrs.K SELVANAYAKI<br>"AMUTHA SURABI" MURASUMODDAI |
| PRICE | :- | Rs. 100/= |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலின் பெயர் :- கோபுர வாயில்
கண்டாவளைக்கவிராயர்

உள்ளடக்கம் :- திருவாரங்கள்

நூலாசிரியர் :- கண்டாவளைக் கவிராயர்
சித்தர். கு.இராசையா.
"அமுதசுரபி"
முரசுமோட்டை.(இலங்கை)

தற்காலிக விலாசம் :- " தில்லை வனம் "
வியாசர் வீதி,
தோணிக்கல்.
வவுனியா.

முதற் பதிப்பு :- புரட்டாதி நவராத்திரி 1999

அச்சகம் :- S.தம்பி
கணனி அச்சகம்
ஸ்ரேசன் வீதி,
வவுனியா.

வெளியீடு :- குருகுலப் புலவர் வட்டம்,
கிளிநொச்சி.
" அமுதசுரபி "
முரசுமோட்டை.(இலங்கை)

பதிப்புரிமை :- திருமதி .கு. செல்வநாயகி

விலை :- 100/=



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே - - -

பக்கம்


1. கோணகுளத்தான் அருள் கூர்ந்தனனே
2. கோணகுள விநாயகர் திருப்பள்ளிஎழுச்சி
3. திருத்தில்லைச் சிறப்பு
4. திருத்தில்லை
5. மதுரை மீனாட்சியம்மை
6. திருச்செந்தூர்
7. திருப்பெருந்துறை
8. திரு வீழிமிழலை
9. திருப்பழனி
10. காசி கங்கை
11. திருவொற்றியூர்
12. சீர்காழி
13. திரு அண்ணாமலை
14. திரு அண்ணாமலை உச்சி
15. திரு இராமேச்சுரம்
16. செருகக்கல் ஸ்ரீவிநாயகர்
17. திருக்கேதீச்சரம்
18. ஸ்ரீசுட்டிபுரம்
19. நநதன் புலம் நாகபூசணி பதிகம்
20. பொறிக்கடவை அம்பாள் திருப்பதிகம்
21. ஊழறு பதிகம்
22. பரந்தன் ஐந்தாம் வாய்க்கால் வரசித்திவிநாயகர் திருவூஞ்சல்
23. முரசை ஊற்று விநாயகர் திருவூஞ்சல்
24. நல்லூரான் பேரருளை நம்பு
25. திருக்கேதீச்சரப் பற்று
26. நாடும் பயிர்கள் நயக்க
27. கோணகுள விநாயகர் முறையீட்டுப் பதிகம்
28. பணிக்கன்குளம் விநாயகர் திருவூஞ்சல்
29. வவுனியா வைரவபுளியங்குளம் ஆதிவிநாயகர் திருப்பள்ளி எழுச்சி
30. ஆலய மாமணி ஓசையிலே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## சிவமயம்

இலங்கை மெய்கண்டார் ஆதீனம் இளைப்பாறிய
குருதொண்டு முதல்வர் ஞானப்பிரகாசசிவம்
மகாவித்துவான் சித்தாந்த கலாநிதி (B.A)
அவர்கள் வழங்கிய வாழ்த்துரை

செந்தமிழும் சிவநெறியும் கண்ணாய்க் கொண்டு
சிறப்புமிகு கண்டாவளைக் கவிஞ னாகி
நந்தமிழர் திருக்கோயில் நாற்ப தின்மேல்
நலமிகுந்த கவிமாரி பொழிந்த வள்ளல்
பைந்தமிழர் கிராமசேவை யாளன் ஞானி
பார்புகழும் தேசிய விருதும் பெற்றான்
எந்தமிழர் போற்றுகின்ற இனிய செம்மல்
ஏர்புகழும் இராசையா என்னும் வேளே !

### இவர் திருவண்ணாமலை உச்சியிலே

விண்ணார்மலை யுச்சி வேண்டிஞானம் வந்தேனைத்
தண்ணாரும் மரநிழலிற தவசிபோல வீற்றிருந்து
கண்ணாலே நோக்கி யெனைக் கதறியழும் படியாக
அண்ணாம லையடையாய் அடிமைகொள நின்றாயே!

என்னும் திருப்பாடலைப் பாடியதுமன்றி மற்றும் பல
இந்தியா இலங்கைத் தலங்கட்கும் பாடிய பண்புமிகு
தெய்வீகக் கவிஞர்.

சித்தாந்த கலாநிதி க.கணபதிப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கலைமணி, சைவப்புலவர் பொன்.தெய்வேந்திரன் ஓய்வு பெற்ற ஸ்ரீலங்கா கல்விச்சேவை அதிகாரி அவர்கள் வழங்கிய மதிப்புரை**

"கோபுரதரிசனம் கோடிபுண்ணியம் " என்பது முதுமொழி. கோபுர வாயிலும் இதைச் சார்ந்ததே. "வெண்டாமரைக்கன்றி நின்பதந் தாங்க என் வெள்ளை யுள்ளத் தண்டாமரைக்குத் தகாது கொலோ "என வினா எழுப்புகிறார் கலைவாணி அருள் பெற்ற குமரகுருபரஸ்வாமிகள் . "இங்கோ கண்டாவளைக் கவிராயர் "கலங்க நீ வேண்டாம் சொன்ன கவிகளிற் பிழை யொன்றில்லை என்று கரிமுகன் ஆணை பெற்றே கவிமாலையைக் கோபுரவாயிலில் தொடுக்கின்றார். என்னே! அருளின் பொருள். "பாடும் பணியே பணியாயருள்வாய்"என்று அருணகிரிநாதர் பாடினார்.அது "மா" திருப்புகழ் ஆனால் கண்டாவளையாருடையது "போதொடு நீர் சுமந்து ஏத்தி "ப்பாடிய "பா"த் திருப்புகழ். பல் தலங்களையும் நல்வகைப்படுத்தி தன் பாத்திறத்தால் உரிய பாத்திரங்களைப் புனைந்து பாமாலை சூடியுள்ளார்கள். பூமாலை மூன்று தினங்களில் வாடிவிடும். ஆனால் கவிராயருடைய பாமாலைகள் மூன்று யுகங்களுக்கு மேலும் பாடி மகிழத்தக்கவை. நாடிப்பாடுபவர்களை நெகிழவைப்பவை.

பைந்தமிழ்,தீந்தமிழ்,செந்தமிழ்,நந்தமிழ் எல்லாம் கலந்து புனைந்திருப்பது பாமரமக்களும் படித்துணர வசதியானது.அவரது வழித்தெய்வமாகிய கோணைகுளத்தான் அருள் வேண்டி ஆரம்பித்திருப்பதும் அருமையே. திருத்தில்லையில் வருந்திய ஓலம்,மதுரை மீனாட்சி மேல் பாடிய கோலம், திருவாசகதிலைப்பில் திருப்பெருந்துறை, ஆறுபடைவீட்டின் அருட்பிரவாகம், திருவொற்றியூர் ,சீர்காழி,திருவண்ணாமலை,செருக்கல் விநாயகர் என்று ஈழம், பாரதம் ஆகிய இரு பிரதேச தெய்வத்துதி பாடி,பாவமைத்ததும் வியத்தகு சிந்தனையே. வந்தனை செய்வோர்க்கு இது ஒரு சுலபவழி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டாவளையிற் பிறந்தாலும் வெண்டாமரை அரசியின் அருட்பிரவாகம் இராசையாப் பெரியவரின் உள்ளத்தில் புகுந்து வாட்டமில்லாப் பாட்டைத் தரவும் பாட்டைப் புழிக்கவர்க்கு சாட்டையடி கவியால் தொகுக்கவும் முடிந்தது. புவியில் பிறந்த பேறு, ஏறமர் செல்வனை நினைந்து நினைந்துருகி அவனருளைப் பருகிப் பாடியவை எல்லாம் கவிராயரின் பக்தி வைராக்கியத்தைக் காட்டுகின்றது.

"பா" வரிசைக்குரிய அணிகுறையாமல் நனி சிறந்தசீர் வரிசைகளை நிறைவாகப் புகுத்தியிருப்பது இன்னுமோர் சிறப்பு. உழுதுண்டு வாழும் சிறப்பில் வளர்ந்து, பழுதிலா கிராம சேவகராகி நன்மதிப்புடன் மக்கள் தேவைக்கேற்ப சேவையாற்றி மகிழ்ந்து,எழுபத்தெட்டுப் பகுதியில் விழுது போல் கவி ஊறறெடுக்க,சித்தர் பரம்பரையில் வந்தமையால் பண்போடியைந்த புக்தராகி பாடத் தொடங்கினார். இன்றும் பாடிக் கொண்டே இருக்கின்றார். அடுத்து கந்த கோட்ட மான்மியமும்தயாராகின்றது.ஊஞ்சல்,திருஉலா,ஓலம்,போற்றி, வாழ்த்து,பள்ளியெழுச்சி எனப்பலப்பல வெளிவந்துள்ளன.

"நிறைவிலா நெஞ்சத் தென்றும் நின்றருள் புரியும் முன்னோன்
அறிவிலா அடியேன் என்னை அன்புடன் அணைத்தாட் கொண்டு"
என்று இறைவனை வேண்டியவர் ஈற்றில்

"ஆட்டுவரொருவரின் ஆதரவின்றி ஆடுமோ பொம்மையும் தானதாய்
அந்த ஆட்டிடும் சக்தியதாக நின்றுலகின் அணு முதல்
அனைத்தையும் ஆட்டுவான் நீயாம்"

என வேண்டுதலால் கவிராயரின் இறைசிந்தனை நிறைவாகப் புலப்படுகின்றது. கோபுர வாயிலில் நுழைவோர், நன்கு நுகர்ந்து இடர் களைவர். எனவே கண்டாவளைக் கவிராயருடைய நனி சிறந்த பணி கவியுலகில் அணி செய்ய துணிவுடன் தொடர, திரிபுரமெரித்த விரிசடைப் பெருமானினதும் பெருமாட்டியினதும் பேரருளை இறைஞ்சி பன்னெடுங் காலம் நன்னெறியில் வாழ மனமுவந்து வாழ்த்துகிறோம்.

சுபம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## சிவமயம்

# திருவருட் பாயிரம்

பத்தி வரோங்கெழு பாரதம் சென்றுமுன்
சித்தர் களேத்திய சிவதலம் நீடருள்
அத்தன் திருப்பதம் ஆரவுள் போற்றிமால்
சித்தம் தெளிந்தருட் சீர்பெற எண்ணினம்

தென்னர் மூட்டிய தீவிரப் போர்க்கொடு
பன்னு யாத்திரைப் பயண மைவுற
என்ன மார்க்கமும் இசைவுறா வீக்கலின்
துன்பம் மேலிடச் சோம்பியி ருந்தனம்

### வேறு

ஆயிரத் துத்தொளா யிரத்தொன் பானிரண்
டேயதை செல்லையா இலக்குணத் தொடும்
ஆய்வையின் நடுநிசி அண்டி வந்தெமை
மேயினம் யாத்திரை விழித்தெ ழென்றனர்

நாயினும் கடையராய் நம்மை நோக்குவார்
ஆயவ ரபடை அரண்த டைகடந்
தேயபு கைவண்டி ஏறி நண்பகல்
போயினம் தலைநகர்ப் புறகோட் டையரோ

அந்தமா நகரிடை அரச மன்னர்கள்
பந்தபா சமொழிந்த பரம சாதையும்
முந்துயாழ் வாசியென் முனிவின் ஆய்ந்தபின்
வந்தபேர் அவர்வழி வரமே லொப்புவார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறு

இந்த மாதிரி ஈனர்க ளெம்மையும்
சிந்தை நொந்துளம் சினமடை யும்வரை
அந்த ரங்கம னைத்தையும் ஆய்ந்தபின்
எந்த இடமென ஏகுழி விட்டனர்

## வேறு

ஒருசில நாட்களாங் கோய்வெ டுத்தபின்
திருத்தல யாத்திரைச் செலவிற் றோந்தவர்
திருவளர் நவரத்னம் சேர்தலை மையின்
அருள்மலி பாரதம் அடைவின் மேவினம்

நீங்கரும் பிறந்மண் நினைவு நீங்கவுள்
தாங்குவா ஞாதிவிண் தாவி இந்தியா
ஓங்குதி ருவனந்த ஊரெ டுத்தெமைத்
தீங்கறு புண்ணியம் திளைமண் சேர்த்தமேல்

## வேறு

நெடிய வீதிகள் நிமிர்ந்துயர் மாமலை
படரும் சிறுவழி பையைய நீங்கினம்
சுடரும் விவேகானந் சுவாமி நிட்டையாழ்
விடர கம்கன்னி யகுமரி மேவினம்

பூண்ட பெருந்தவம் நிறுவிய புண்ணியன்
மாண்ட னனாயினும் மனநிறை வெய்துவான்
மீண்ட னன்வந்தான் மேவுமிக் கோட்டமென்
காண்ட னம்கன்னி யகுமரிக் கல்வனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிஞ்சுற நோக்கினம் செய்த நல்வினை
அருஞ்சிறப் பிணாலுளத் தறிவு கைதர
விரிஞ்சுறப் பிணிமல வேய்வின் காரிருட்
பெருஞ்சிறை மீண்டவா பெற்றி பெற்றனம்

நீத்தரும் வானமும் சிறுக நெஞ்சிடைக்
கோத்தவன பறிவிடைக் குளிப்ப மீக்கொள
ஏத்துவம் நடம்பயின் ஈசன பாதமென்
பூத்தருள் பொலிதலம் தில்லை போந்தனம்

போந்தனம் தில்லையின் புதுமை கண்டுளம்
தோய்ந்தருள் வெள்ளத்திற் துய்த்தி றைவனார்
ஏந்தெழில் ஆடல்கண் டார்க்க நின்றருள்
மாந்தலின் பதிகங்கள் மாணப் பாடினம்

வேறு

இன்னணம் பாடல் பெற்ற இந்தியத் தலங்க ளான
கன்னிய குமரி தொட்டுக் காசியீறாக வோங்கு
பன்னரும் தலங்கள் சுற்றிப் பதிகங்கள் பாடியேத்தித்
தன்னிக ரில்லாத் தீத்த சாகர முமாடி னாமரோர்

பாடிய பாடல் கேட்ட பரிவினாற் திருக்கலன் சார்த்தி
நீடிய அருளை உச்சி நியமநி லைய மர்ந்து
ஆடிய பொற்பா தங்கள் அடியனும் காணக் காட்டித்
தேடியும் அயன்மால் காணான் திருவருள்பாலித்தானே

"அமுதசுரபி"
முரசுமோட்டை

கண்டாவளைக் கவிராயர்
"தில்லைவனம்"
வியாசர் வீதி
தோணிக்கல்
வவுனியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோணகுளத்தான் அருள் கூர்ந்தனனே !

1. அன்பினா லடியேன் அன்று
அகமகிழ்ந் தாக்கிச் சென்ற
முன்னவன் புகழ்பே சுபாவை
முறையிலாப் பாட லென்றே
இன்தமிழ்க் கவிநக் கீரன்
ஈசனை எதிர்த்த வாறே
என்கவிக் கிழுக்கு ரைக்க
இருந்துநான் புலம்பி னேனே !

2. புலம்பலுக் கிரங்கித் தொந்திப்
புண்ணியப் பொருளே தோன்றிக்
"கலங்கநீ" வேண்டாம் சொன்ன
கவிகளிற் பிழையொன் றில்லை
அலம்பினும் எம்பே ரன்பாய்
அன்புட னேற்போம் மேலும்
தலம்பல பாடி யெம்மைத்
தரணியோர்க் குணர்த்தென் றாங்கே

3. சூழ்ந்த துயரைத் துடைத்தகற்றத்
தொந்தி பூணூல் குடுமியுமாய்
ஆழ்ந்த உறக்க வேளையிலே
அண்டிக் காட்சி தந்தருளிக்
"கூழ்ந்த கவியென் குழையாதே
கோண குளத்தே யாமிருப்போம்
தாழ்ந்த கவியும் தரமாகும்
சஞ்சல மின்றிப் பாடுவையே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. என்றே யென்முன் இருந்தருள
  எளியேன் யானும் இரந்தங்கே
முன்னோன் நீயே எனப்பாட
  முதிர்ந்தோர் தவறென் மொழிகின்றார்
ஒன்றும் அறியேன் இறைவாயான்
  உணர விளக்கி யருளெனவே
முன்னோன் யாமெனும் உண்மையெலாம்
  முழுதும் சரியாம் அறியென்றே

5. செந்நிற மேனியும் நீண்ட
  செவ்விள நீரொத் தசென்னியும்
தொந்திப் பெருவயிறும் மார்பின்
  துலங்குருத் திராட்சை பூணூலாய்ச்
சிந்தைநி றைதண் மதிமுகமும்
  திருநீறு மேனி யமாயமர்ந்தே
எந்தைகோ ணகுள ஏரம்பன்
  தந்தே காட்சி அருளினனே !

6. மூட்டைக் குழப்ப முனைந்தவோர்
  கந்த சாமி முன்னோனின்
பாட்டைப் பழித்த வையிலிறை
  பக்திக் கிழுக்கு ரைக்கடியேன்
வாட்டம் கண்ட கோணகுள
  வார ணனாட்கொண் டேதனது
பாட்டைப் பாடும் படியென்னைப்
  பணித்த ருளபா லித்தனனே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. கூட்டத் திடைதன் பாட்டிற்
குற்றம் சொல்லி யென்னை
வாட்டம் கொள்ள வைத்த
அன்னான் வஞ்சம் கண்டே
பாட்டுப் பாடி யிந்தப்
பாரோ லாம்தெய்வ சிந்தை
கூட்டும் படியெனைக் கோண
குளத்தான் அருள்கூர்ந் தனனே !

8. கூர்ந்தநல் லருளி னாலே
குவலய மக்கள் உய்ய
ஆர்ந்தநன் நெறியைச் சொல்லி
அனைவரும் அதனைப் பற்றிச்
சார்ந்துநல் லருளைக் காணத்
தக்கதாம் வழியைக் காட்டும்
தேர்ந்த பேரருளைப் பாடத்
திருவருள் பாலித் தனனே !

9. பாட்டோ பாட்டின் பொருளோ
பண்டித ராக்கி வைத்த
பாட்டியல் நூல் தாமோ
படித்தறி யாப்பே தையெனைக்
கூட்டி வைத்தே யிந்தக்
குவல யத்தார்க்கி றையருள்
தீட்டும் படிகோ ணகுளத்
திண்டி முகனா ருளினனே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. நிறைவிலார் நெஞ்சத் தென்றும்
  நின்றருள் புரியும் முன்னோன்
அறிவிலா அடியேன் என்னை
  அன்புடன் அணைத்தாட் கொண்டு
கறையிலா வாழ்வும் காட்டிக்
  கவியினைப் பாட நாளும்
குறைவிலாத் தமிழும் ஈயும்
  கோணகு ளம்வாழ் கோவே !

11. செந்தமிழ் இலக்கிய நூல்கள்
  தெளிவுறச் செவ்வே யெற்கு
விந்தையாய் ஓதியெ னையோர்
  கவியென விளக்கி வைத்த
எந்தையாம் கோண குளம்வாழ்
  எரம்பன் பூங்க ழல்கள்
சிந்தையே மறவா நாளும்
  தியானித் தேத்து வேனே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோணை குள விநாயகர் திருப்பள்ளி எழுச்சி

1. புலர்ந்தது பொழுது புவன மெங்கும்
பறந்தன புட்கள் புகவு தேடி
மலர்ந்தன மலர்கள் வாவி மேவு
வண்டினம் மதுவுண் டுகளிப் பனவால்
உலர்ந்தது பனிப்பு காரு லகிடை
யொதுங்கிய திருள தொளிம யமாயே
அலர்ந்தது கோணை குளஜங் கரனே
ஆனந்தப் பள்ளி யெழுந்த ருளாயே!

2. கூவின கோழி கள்கு யிலினம்
குரலிசை கொடுத்த னகுவ யைத்தே
ஆவினம் பால்க ரந்தம் மாவென்
றழைத்தன சேயி னங்கள் றூட்டக்
கூவினர் உழவர் முற்றிய கதிர்
கொய்திடும் கிளிகள் கூட்ட மோட
வாவிசார் கோணை குளப்ப தியுறை
வரதனே பள்ளி யெழுந்த ருளாயே!

3. போற்றிடு மடியார் போந்த னர்வாய்
புகழ்ந்துனைப் பாடிப் பாடிப் போற்ற
ஏற்றிடு வாயென் றுனைநெஞ் சார
வேத்தவென் னிலாகு முமினர் இங்கு
சாற்றிடு மன்பர் தம்மின் உள்ளச்
சஞ்சலம் கேட்டே யவர்க்க ருளாண்டு
மாற்றிடக் கோணை குளமா கரியே
மறைனைப் பள்ளி யெழுந்த ருளாயே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. ஊதுவார் சங்கு களொலித் தனடோற்
றூரவர் உறக்கம் விட்டெ ழுந்தார்
ஓதுவா ரிங்கெ லாம்கு ழுமினர்
உன்புகழ் ஓதி யோதி வேண்ட
ஏதுதாய் தாம தமெழுந் தருள
எம்பெரு மானே கேட்டி லையோ
சாதுவாய்க் கோண் குளப்ப பதியுறை
சாமிநீ பள்ளி யெழுந்த ருளாயே!

5. வந்தனர் மலரொ டுவனி தையர்
வெழுத்திவ ரமது வேண்ட வேண்டி
நொந்தனர் வந்தனர்நி னதருள்
நோக்கிட அவர்தம் நோக்க மான
பந்தமும் பாசமும்நீங் கநீக்கிப்
பரகதி சேர்த்து வைக்க வல்ல
எந்தையே கோண குளப்ப திமேவு
ஹேரம்ப பள்ளி யெழுந்த ருளாயே!

6. மதுவினில் மதிநி லைம றைந்த
மாந்தரும் மனம துமாறி யிங்கு
புதுவித மனித ராய்ப்பு குந்தார்
போற்றிட நினது பொற்க ழல்கள்
வதுக்கினை யருளி யன்ப ருலக
வாழ்வினில் வளம்பெற் றோங்க நல்ல
கதியருள் கோண குளக்கற் பகமே
காலைநீள் பள்ளி யெழுந்த ருளாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. முந்திய தோற்றம் தன்னால் நின்னை
முன்னவ னென்று லகோர ழைத்தார்
பின்னையேன் சிவனார் பிள்ளை யென்றார்
பிசநிது நாமு மறிந்தோ மில்லை
வந்தனை செய்ய வருமெய் யடியார்
வழுத்துவார் நினைத்த வரமதில் முகமே
விந்தைதான் கோண குளம்மே வியருள்
விநாயக பள்ளி யெழுந்த ருளாயே!

8. ஈட்டுதம் பொருளை யேற்ற வழியி
யாதிப் பூ மேல்வாழ் கின்ற மாந்தர்
பூட்டிவைத் துத்தா முழுமண்ணா தினமும்
பூதமே போலக் காத்து நிற்பார்
நாட்டங்கள் மாறி நல்ல வளம்
கொள்ளைவைத் தேழை நலன்காக் குநெறி
தீட்டிய ருள்கோ ணகுளக் கோவே
திருப்பள்ளி யெழுந்த ருளாயே!

9. கல்லா மூடர் கசடர் எனர்
கன்நெஞ் சர்கற் றுமறி வில்லார்
பொல்லாப் புரட்டர் புல்லர் கொலைஞர்
எவ்வெ வருமுன் னைப்போற் றிநிற்க
அல்லா ரிவரென் அகற்றி வையா
தெவர்க்கு மருள ளித்தாள் கின்ற
நல்லாய் கோண குளநா யகனே
நலமார் பள்ளி யெழுந்த ருளாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. ஆதியே அருவு ருவான வடிவே
அகிலமெ லாம ருளாண்டு காக்கும்
வேதமு தல்வ னேவேண் டுவார்தாம்
வேண்டுவ விரும்பி யீயித் தகவே
[illegible]
சிறப்புறக் கோயில் கொண்ட நல்ல
நாதனே கோண குளம்வாழ் ஞான
னேதிருப் பள்ளி யெழுந்த ருளாயே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருத் தில்லைச் சிறப்பு

காலனை யுதைத்தா யோலம்
  கரியுரி போர்த்தா யோலம்
மாலயற் கரியா யோலம்
  மாரனை யழித்தா யோலம்
ஆலமு துண்டா யோலம்
  அமரரைக் காத்தா யோலம்
வேலனை யுய்த்த தில்லை
  விமலனே யோலம் ஓலம்

தெய்வம் மறந்த தறியேன்
  திருநீ றணியா தறியேன்
பொய்வஞ் சகஞ்ச மறியேன்
  புகலி டமறியாப் பேதை
செய்வ தறியா மனித
  தேகம் எடுத்துழல் வேனை
ஐயநீ யல்லா தெவர்தா
  னணைத்தாள் வதில்லைச் சிவனே!

தில்லை யிலுத்தர நாளுன்
  திருநடம் காணவா மேலிட்
டெல்லையி லாமகிழ் வெய்தி
  வருவழி யெம்மை இலங்காத்
தொல்லைப் படைகள் தடுத்தே
  தொடுத்தன போரினை மீண்டும்
அல்லலு றலமு கோதின்
  னடியவர் தில்லைச் சிவனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறு

எல்லையிலாவ டியார்கூட்டம்
  என்றும் வந்து வந்தேத்தும்
தில்லை யிலேதி ருச்சிற்றம்
  பலன்தி ருநடம் காண்கண்கள்
கொல்லும் படைகள் கண்டுமஞ்சா
  கொடுமை யாளர் ஏவுகின்ற
'செல்'லெ திர்கொண் டுந்துஞ்சா
  அவைதி ருஞானக் கண்களே!

அரவொ டுமதி கங்கையணிந்
  தாடம் பலவா ணர்தம்மைத்
திரமொ ருமனத் தினராகத்
  தில்லைக் கோயில் சென்றடைந்து
அரக ரசிவ சிவவென்றே
  யருட்தி ருப்பா தம்தொழுவார்
பரக திவாழ்வு பெற்றுய்யும்
  டக்கு வநிலை எய்துவாரே!

நினைவார்க் கருளு மெம்பிரான்வெண்
  நீறு கொன்றை பாம்புமதி
புனைவார் சடையாய்ப் புகலுபதி
  திருத்தில் லையம்ப லவரங்கின்
மனையாள் சகிதம் திருநடனம்
  ஆடு கின்றான் மாமன்றம்
தனையார் நாடி வந்திடினும்
  தாங்கி யருள்புரியுமாறே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளுடை யானை அனைத்துயிரும்
படைத்தரு ளாளு டை யானை
அருவுடை யானை அன்புள்ளப்
பெருவுடை யானை வார்சடையிற்
பிறையுடை யானை உமைபங்கனைத்
திருவுடைத் தில்லை யம்பலத்தே
சென்றவன் திருவ டிதொழுதிலே !

## வேறு

நாளென்ன கோளென்ன நமனென்ன
நாட்டி லெழும்ப கைதானென்ன
ஊழென்ன னுடம்ப டுநோயென்ன
ஊனெனன் தில்லைக் கூத்தன்திருத்
தாளினை யிறுகப் பற்றித்
தஞ்ச மென்று வணடிசாரின்
பாழ்வென் னுவாதை மாறி
மறுபிறவிபொ ழியும்தானே!

## வேறு

அருளோங் குமுரு வோங்கும்
அறநெறி களண்டி யோங்கும்
பொருளோங் கும்வாழ் வோங்கும்
புலமையுள் ளோங்கும் பூ மேல்
கருவோங் குமுரு வோங்கும்
காலமெ லாமன் போங்கும்
திருவோங் குதில்லைக் கூத்தன்
திருவடி யர்ச்சித் தார்க்கே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருத் தில்லை

காலனை யுதைத்தா யோலம்
   கரியுரி போர்த்தா யோலம்
மாலயற் கரியா யோலம்
   மாரனை யழித்தா யோலம்
ஆலமே துண்டா யோலம்
   அமரரைக் காத்தா யோலம்
வேலனை யுய்த்த தில்லை
   விமலனே யோலம் ஓலம்

தெய்வம் மறந்த தறியேன்
   திருநீ றணியா தறியேன்
பொய்வஞ் சலஞ்ச மறியேன்
   புகலி டமறியாப் பேதை
செய்வ தறியா மனித
   தேகம் எடுத்துழல் வேனை
ஐயநீ யல்லா தெவர்தா
   னணைத்தாள் வதில்லைச் சிவனே;

தில்லை யிலுத்தர நாளுன்
   திருநடம் காணவா மேவிட
டெல்லையி லாமகிழ் வெய்தி
   வருவழி யெம்மை இலங்கைத்
தொல்லைப் படைகள் தடுத்தே
   தொடுத்தன போரினை மீண்டும்
அல்லலு றவழ கோறின்
   னடியவர் தில்லைச் சிவனே;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில்லைப் பதியிலே நின்று
திருநடம் செய்துல குய்க்கும்
தில்லை நடனேநின் கூத்தென்
சிந்தை தெளியவைத் தேகாண்
எல்லை யிலாப்பே ரருளை
எளியனுக் கின்ற குருநை
தில்லைப் பதியிற்றே வார்க்காய்த்
திருநடம் செய்த சிவனே!

எல்லையி லாவுந்தி ருநடம்
கண்டுகண் டேத்தி யிறைஞ்சத்
தில்லையிற் கூடுவர் வந்து
தினந்தினம் தேவர் முனிவர்
அல்ல னிவனென் றொதுக்கா
அணைத்தண் டியிவ்வெ ளியனும்
தில்லை யரங்கினிற் காணத்
திருநடம் செய்தருள் பாலியே!

சிந்தை யடக்கி யாளும்
திறனுடை ஞானி முனிவர்
எந்தப் பொழுதுமி றைதம்
இதயத் திருப்ப துணர்ந்தே
வந்தவர் கோயில் வணங்கும்
வழக்கினைக் கொள்வ தரிதாம்
அந்தமும் ஆதியு மில்லா
அருட்பெரும் தில்லைச் சிவனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தைதன் போக்கை யடக்கும்
திறனுடை ஞானிநா னல்லேன்
சொந்தமிவ் வாழ்க்கை யெனவே
சுகவாழ் வுநாடியு வந்தேன்
பந்தமும் பாச முமுளம்
பற்றி மயக்குதே ஐயா
நந்தனை யேற்றவா றின்நாய்க்
குமருளாய் தில்லைச் சிவனே!

அருளுடை யானென்றன் பரிந்த
நாயெனை யண்டநீங் காத
மருளுடை யானுப தேசம்
மற்றோர்க்குச் செய்வதா மென்னை
தெருளுடை யானாக்கித் தேசம்
தெய்வசிந் தைகொள வைப்ப
திருவுடை நீயலால் மற்றோர்
சிவமுண்டோ தில்லைச் சிவனே!

பொல்லா வினைவந் துறுத்தா
போக்கி யெனையரு ளாள
நல்லான் ஒருவன்நீ யென்ன
நம்பிமுன் வந்தவின் நாயேன்
அல்லா தவனாகா வாறு
ஆற்றுப் படுத்தா யருளி
எல்லாம் நிறைந்த இறைவ!
தில்லைச் சிவபெ ருமானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிகள் கோயில னாதை
  விடுதிகள் பார்த்தே விமானம்
அள்ளிச் சொரிகுண் டதனா
  லெம்மை அடக்கி யொடுக்கும்
மள்ளர் செயலினா லீழம்
  மனுவதை யோங்கிச் சிதைவ
தெள்ளத் தெளிவா யிருந்தும்
  மௌனமேன் தில்லைச் சிவனே!

உண்டொன் றுதெய்வமென் றோரா
  உழுத்தரும் நம்பிக்கை கூட்டக்
கண்டா வளைக்கவி ராயன்
  கழறு முறையீ டறிந்து !
தொண்டர்க் கிரங்கிய வர்தம்
  துயரினைக் காத்தரு ளாளாய்
அண்டரும் வந்துவந் தேத்தி
  யர்ச்சிக்கும் தில்லைச் சிவனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதுரை மீனாட்சியம்மை

அங்கிங் கெனாதெங் கும்நிறைந்த
ஆனந் தபரி பூரணிநீ
அங்க ஊரிட பாகமிணைந்
தருளாள் கின்ற சக்தியும்நீ
சிங்க மீது லாவியிந்தச்
செகமெ லாம் இரட்சிக்கும்
மங்க லந்தங் கிவளர்மா
மதுரை மீனாட் சியம்மையே!

இன்றுன துதிரு வடியை
யிறைஞ்சி யேத்து மெளியேன்
என்றன தெண்ணம் யாவும்
இறைநீ யறிவா யம்மா
என்றுமு ளசைவ மகிமை
யெடுத்தோ தியுண்மை நாட்ட
நன்றுத ருஞான மூட்டாய்
நயன்ம துரைமீ னாட்சியே!

மங்கை சிவகாமி நீயே
மாமது ரையாளும் தாயே
எங்குறை கேட்டிது வேளை
ஈழத் திழிகொலைநி றுத்தி
யங்கு ளதுதிரு நோக்கான்
அமைதிநிலை நாட்டாய் மதுரை
தங்கி யருளெங்கும் நிறைந்த
தயாளமீ னாட்சியம் மையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னையே மீனாட்சி யண்டம்
அனைத்தும் படைத்திரட் சிக்கும்
உன்னையே நம்பி யிறைஞ்சும்
உயிர்களைக் காப்பாய்நீ காப்பாய்
முன்னைநோ் நீதி தவறு
முடிவேந் தனாம்பாண் டியநாடன்
தன்னையே தண்டித் தரச
தா்மம் உணர்த்திய தாயே!

உன்னையே தெய்வமென் றுள்ளத்
துறுதிவைத தேத்து மெளியேன்
சொன்னநேர் பாடற் கிரங்கிச்
சுகம்பெ றுகிருபை செய்வை
பின்னுமோர் தெய்வருள் வேண்டிப்
பேதையான் செல்வ தழகோ
அன்னையே மதுரை மீனாட்சி
ஆதி சிவசக்தி நீயே!

தாயெனு மன்புளந் தாங்கித்
தாரணி யாண்டருள் தாயே!
சேயெனும் பந்தபாசங் கோரிச்
சிறியனேன் செய்முறை யீடு
நாயெனைக் கீழ்த்தரம் வைத்தே
நம்தமிழ் ழினத்தை யொடுக்கும்
பேய ரசொதுங்கி யீழம்
பிரிய வருளன்னை நீயே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரத்தமே யோடாமலன் னிழும்
  இரட்சித் தருள்காக்க வேண்டும்
சிரத்தையே கொண்டுயிர்க்கொ லைகள்
  செய்வதைத்த டுத்துத் தமிழர்
கரத்தையே மேலோங்க வைத்துக்
  காதகர்ச ரண்புகத் தாண்டும்
வரத்தையே நல்கிச்சீர் காப்பாய்
  மதுரைமீ னாட்சியம் மையே!

தொம்தொ மெனந டமிடு
  சுந்தரே சர்க்குத் துணையாய்த்
திம்தி மெனவடியெ டுத்துக
  கொடுக்கின்ற தேவியாம் நீயே
அம்பலவ னாடுபாத நுட்ப
  மெல்லாம் அறியவல் லாய்பொன
னம்பலன் கூத்தையார் மற்று
  அறிவர் மதுரைமீ னாட்சியே!

மண்ணினிற் பிறந்த பேர்கள்
  மன்னுயி ரோம்பிக் காத்துப்
புண்ணியச் செயலி யற்றிப்
  பொறாமைகோள் பொய்வி லக்கிக்
கண்ணியம் கடைப்பி டித்துக்
  கடவுளை நினைந்து வாழ்வார்
எண்ணினிற் குறையு தம்மா
  எழில்மது ரைமீ னாட்சியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பிகை நாரணி யம்பாள்
ஆரணி காரணி துர்க்கை
யம்பை அபிரா மியுமை
ஆநந்தி பார்வதிகா மாட்சி
யம்பணத்தி யாரிமீ னாட்சி
ஆளியூர்தி காளியாமுன் நாமம்
உம்பர் தொழுமுலக மாதா
வுரைத்தேத் தெளியனை யாள்வையே!

கண்டா வளைக்கவி ராயன்
கசிந்துள் ளரற்றிய பத்தும்
கண்டார்கள் கேட்டார்கள் மற்றோர்
காதலா யோதின் தமிழ்ப் போர்க்
குண்டா முயர்வெற்றி யம்மை
மீனாட் சிதிரு வருளான்
பண்டார் தமிழன்கொ டியீழம்
பறப்பதிங் குண்மையுண் மையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருச் செந்தூர்

செந்தூர்ப் பதிய ருள்மேவு
செய்ய வேலா யுதப்பொருளே
வந்தூர்க் கருளும் வடிவேலா
வள்ளி குஞ்ச ரிசமேதா
நொந்தே நினது திருவடி காண்
நோக்கின் திருச்செந் தூர்வந்தேன்
கந்தா கடம்பா குகாகார்த்தி
கேயா காத்த ருளாயே!

அன்ப னருணை கிரியை
அணைத்தாட் கொண்ட குமரேச
துன்பம் நிறைந்த வாழ்வின்
சுகமே காணு முளனாகிப்
பொன்னும் பொருளும் தேடும்
போக்கிற் புரிந்தே வந்தவெய்ய
கன்மங் களைந்தெ ளியனைக்
காத்தா ளாய்செந் தூர்க்கோவே!

வேலா யுதனே உனைநான்
வேண்டி வேண்டி யிரவுபகல்
நாலா திசையும் தேடித்
தேடி நலிந்து ளம்சோர்ந்தேன்
பாலா அருணை கிரிக்குப்
பக்கு வமளித் தணைத்தவேலா
கோலா கலமாய்க் காட்சி
கொடுத்தெ னையாட் கொளாய் கொளாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகா விதுவுனக் கென்ன
முடியா தகாரிய மாமோ
அருகா யமர்ந்துட னாளும்
அம்மை குஞ்சரி வள்ளி
திருவாய் மலர்ந்தவ ரொப்பம்
தெரிவிக் கஇனும்தா மதமோ
வருவாய் வருவாய் பாலா
வடிவே லாஇது போதே!

கந்தா வரவுனக் கென்ன
காத தூரமோ ஈசன்
மைந்தா அருணை நாதர்தம்
மரணம் தடுத்தகை வேலா
எந்தா யெனவுனை நாடி
ஏழை யேன்வந்தி ரந்தேன்
செந்தூர் முருகவுன் நாயேன்
சித்தம் தெளியவந் தாளோ!

கல்லா யிருக்கும் கடவுளுனைக்
காத்தி ரட்சிக் குமோவென்மற்
றெல்லாச் சமயத் துள்ளோரும்
ஏள னம்செய் யாவண்ணம்
எல்லா வுலக மதத்தினரும்
இந்து மதமே யுயர்ந்ததென
நல்லாய் புதுமை நிகழ்த்தியிந்த
நாறி லம்நம் பவையாயே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட்ட கல்லைத் தெய்வமென்று
நாளும் பூக்கள் சாத்து கின்றீர்
நட்ட கல்லும் பேசுமோதான்
நாத னதனுள் ளிருப்பனோவென்
வெட்டிப் பேசும் நாத்திகரும்
வியக்கும் வண்ணம் கலியுகத்துச்
செட்டி நீயே புதுமைபல
செய்வை செய்வை செய்வையன்றோ

நட்ட கல்லும் பேச்சதுவும்
நாத னதனுள் ளிருப்பதுவும்
எட்ட ஞானம் அறிகின்றார்
இதய சுத்தி பெற்றவர்கள்
கெட்ட மாயை இருளினுள்ளே
கிடந்து முழுமஞ் ஞானவானும்
தெட்டத் தெளிந்தி றைநோக்கச்
செந்தூர் முருகா அருள்பொழியே!

துட்டர் வாதம் தோற்றடங்கத்
தூய சைவ நெறியோங்க
அட்ட திக்கு முன்நாமம்
அனைவர் வாயு முச்சரிக்க
நட்ட கல்லு அதனுள்ளும்
நாதன் உறைவ னென்றறியத்
தட்டிக் கழியா திருசமயம்
சண்மு காவந் தருளாயே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடிப் பாடி யுன்புகழ்கள்
பாவி யேன்நா னெங்கெங்கும்
தேடித் தேடி நாளெல்லாம்
செந்தூர் முருக வுன்நினைவாய்
வாடி வாடிமனம் சோர
வாசல் முன்னே நிற்பேனை
ஓடி யோடி வந்துள்ளம்
உகந்த ணையாய் இப்போதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப் பெருந்துறை

1. பாடலுக் கிரங்கு வோனென்
   பாவலர் பலரும் நம்பும்
ஆடலன் நினக்கு ஏற்ற
   அணிநடை யமைத்துப் பாடும்
பாடகன் நாயே னாகப்
   பரமனே அருளிச் செய்யாய்
தேடியு மயன்மால் காணாத்
   திருப்பெருந்துறை வாழ் தேவே

2. தெய்வ சிந்தை சிறிதுமின்றித்
   தீய வினைகள் எண்ணிலாஇப்
பொய்யு டலைவ ளர்த்தெடுக்கப்
   புவிமேற் புரிந்தே னுய்யுமாறு
மெய்யு ணர்வூட் டியெனையோர்
   மெய்ய டியனா கவுபதேசம்
செய்த ருளாளாய் திருப்பெருந்து
   றைமே வுசிவ பெருமானே

3. என்று முளசை வநெறி
   இவ்வு லகுபே ணிக்காக்க
நின்றுன் திருவ டிக்கீழ்
   நிதமும் தொழுது பாடியேற்றி
அன்று விட்ட சித்தர்
   அருள்மொ ழிகள்தொ டரயானும்
நன்று தருஞா னதீட்சை
   நல்காய் திருப்பெ ருந்துறையானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. வில்லார் குருந்த மரக்கீழ்
வேத மோதி வாதவூரன்
சொல்லார் திருவா சகத்தேனை
சொரிந்து துதித்த தன்மைகாண
அல்லா னெனக்கும் ஞானம்
அருளிக் காப்ப தென்றென்றோ
எல்லாம் வல்ல இறைவ!
திருப்பெ ருந்து றைசிவனே!

5. நரிகளைப் பரிக ளாக்கி
நலமுற வணிகம் பேசி
அரிமத்த னபாண்டி மன்னன்
அவையண்டி னைவாச சற்காய்
குருவடி வாயி ருந்து
கொடுத்தனை மறையு ணர்வு
திருவுரு வாய்நின் றாளும்
திருப்பெருந் துறைவாழ் தேவே!

6. ஆற்றினை யடைக்கச் சென்று
அடியுதை பெற்றா யப்பா
சோற்றினை யுண்ணச் சென்றே
தொண்டனின் மகன்க வர்ந்தாய்
மாற்றுரு வாயா ரூரன்
மனத்தினைத் தடுத்து நின்றாய்
ஆற்றுனின் கூத்தறி வர்யார்
திருப்பெருந் துறையூ ரானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. பாரினி லரசர் இன்று
படைக்கல வலிமை யாலே
வீரியம் பேசி யூரார்
வேதனை எண்ணா ராகிப்
போரினிற் கொள்ளும் நாட்டம்
பொதுசன நலனிற் கொள்ளார்
ஆரிடம் சொல்லநீ யல்லால்
திருப்பெருந் துறையூ ரானே

8. கொல்லின் மலிந்த அரசார்
கொடுங்கோ லாட்சிக் கீழ்த்தமிழர்
சொல்லும் தரத்தில் வாழா
தொல்லை துயருக் காளாகி
அல்ல லுற்றஞ் சியஞ்சி
அடிமை யாகச் சிங்களர்தம்
"செல்லுக்" கிரையா வநிற்கழகோ
திருப்பெ ருந்து றைசிவனே!

9. மணிவா சகர்தாள் சூட்டி
மிகிழ்ந்த திருவா சகமென்னும்
அணிமா லைக்கென் மாலை
அமைமா லையோ முத்தார
மணிமா லையெனத் தொடுத்தே
மனமா ரவுன்பா தம்சாத்தும்
தணியாக் காதல் கொண்டேன்
திருப்பெ ருந்து றைசிவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. காதலாற் கவிரா சையன்
கழறிய பாடற் கிரங்கி
மோதலால் விளையும் தீமை
முழுதுமே துடைத்துப் போக்கிக்
கோதிலாத் தமிழர் ஆட்சிக்
கொடியீ ழமெங்கும் பறக்கத்
தீதிலா வாழ்வை யருளாய்
திருப்பெருந் துறைவாழ் சிவனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவீழி மிழலை

1. பாலன் ஞான சம்பந்தன்
பாட லைக்கேட் டுளம்நெகிழ்ந்தே
கோலப் பொற்றா ளமவன் கைக்
கொடுத்த னையில் வுலகறிய
வால றிவற்ற இன்நாயேன்
வழுத்து பாடற் குமரங்கிச்
சாலப் பரிச ளியாய் வீழி
மிழலை தங்கி யுறை சிவனே

2. அப்ப ரும்ஞா னசம்பந்தரும்
அன்று னைப்பு கழந்து போற்றிச்
செப்பி யபாடல் கேட்டவர்க்குத்
தினமும் பொற்கா சுபடிவைத்தாய்
ஒப்ப வேயில் வெளியேனும்
ஓது பாவிற் கென்பரிசாம்
அப்ப னேயா திதிருவீழி
மிழலை அமர்சி வபெருமானே!

3. நாடி நாடி நின்பாதம்
நாளும் அன்பு வளர்ந்தோங்கக்
கூடிக் கூடிப் பக்தி நிலை
கூதத நின்பு கழ்கூரப்
பாடிப் பாடி நின்பெருமை
பாரி லலைந்தே யெங்குமுனைத்
தேடித் தேடி யுளம்சோர்ந்தேன்
திருவீ ழிமிழ லைச்சிவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. பொல்லார் மலிந்து நவாடிவாழிப்
புவியி லெங்கு மின்நாயேன்
நல்லார் ஒருவ ரைத் தேடித்
தேடி நாளும் அலைந்துலைந்தே
னல்லாற் காணேன் அல்லார்தம்
உறவு ஒக்கு மேயொக்கும்
செல்லாக் காசென் செய்வதினித்
திருவீ ழிமிழ லைச்சிவனே!

5. சொல்லார் சிவநா மம்பிதாவும்
சொன்ன படிகேட் டென்றென்றும்
நில்லார் நித்மும் நல்லன
நெஞ்சா ரச்செய் யும்நினைவும்
இல்லார் தான தீர்மங்கள்
இன்மு கத்தோ டுசெய்யாத
அல்லார் இருந்தென் போயென்ன
அருட்தி ருவீழி மிழலையாரே!

6. ஊருண் டுறவு தாயுமுண்டு
உற்றுப் பெற்ற நண்பர்கள்
பேருண் டுபுகழ் உண்டன்பாய்ப்
பெற்று தாய்தந் தைமக்கள்
சீருண் டென்னும் செருக் கேறிச்
சிவமெண் ணார்சாம் போதவர்கு
ஆருண் டுவழித் துணை நிற்க
அருட்தி ருவீழி மிழலையாரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. ஐந்து பத்து வயதுவரை
யான வப்பி டியிலாடி
ஐந்து பத்தா னமேல்மெய்வலு
அடங்கி யொடுங்கு வதுகண்டே
அந்த கன்வ ருவான்சாவுக்
கழைப்பி னைவி டுவானென்னும்
சிந்த னைகொள் வரிம்மாந்தர்
திருவீ ழிமிழ லைச்சிவனே!

8. சனநா யகவு ரசமைப்பைச்
சடுதி யர்க் மாற்றி நாட்டில்
இனநா யகவு ரசமைப்போ
மென்னும் இனிமை கள்பேசித்
தனிநா யகனாட் சிக்கெவரும்
சதிப்பு ரட்சி செயாதிருக்கக்
கனநா யகனாய் இருந்தெம்மைக்
காதி ருவீழி மிழலையாரே!

9. ஐந்து பத்தே நாட்கற்றார்
அறிவா ளிதாமு மெனநடிப்பார்
சொந்த வோரி லட்சியத்தைத்
தொடர்ந்து வாழ்விற் பற்றிநில்லார்
எந்த வொருபொ துமேடையிலும்
ஏறிப் பேசத் தயங்காஇவ்
விந்தை யரேன்ப டைத்ததிரு
வீழி மிழலை யுறைசிவனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. பாடி யபாட லாற்திருவுள்
பரவ சம்கொண் டேநின்னை
நாடி யவெளி யேனெற்கு
நயமு றப்ப ரிசுமளித்தே
ஆடி யபாதங் களிரண்டும்
ஐய னேகா ணக் காட்டித்
தேடி யபேர ருள்நல்காய்
திருவீ ழிமிழ லைச்சிவனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பழனி

பழனி யப்பா மெய்ஞானப்
  பழம்நீ யப்பா என்றென்று
மிளம்நீ யப்பா கலியுகத்தின்
  இறைநீ யப்பா அன்பர்கள்
உளம்நீ யப்பா புகுந்தன்பி
  னுறவா யருள்க னியும்முக்திக்
களம்நீ யப்பா பழனிமலை
  மீது குடிகொள் கந்தப்பா!

கந்தப்பா என்சொந் தப்பா
  கருணைமிகு கடல்நீ யப்பா
நொந்தப்பா வுனது வாயில்
  நோக்கிப்ப ழனிவந் தப்பா
சொந்தப்பாப் பாடி யுன்னைத்
  தோத்திரிக்கு மேழை யப்பா
வந்தப்பா வரம ருளப்பா
  பழனிமலை வாழ்கந் தப்பா!

தஞ்ச மெனவந் துனது
  தயவு வேண்டி நின்றிரக்கும்
வஞ்சன் நான்வாழ் வினிலே
  வழித வறிந டந்து விட்டேன்
அஞ்ச லெனமன் னித்தெனை
  யணைத்த ருளாள வேண்டுமப்பா
குஞ்சரத்திற் கிளைய
  கோவே வடிவே லாயுதனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளிக் குகந்த மணாளா
வானோ ரைக்காத் தகுணாளா
அள்ளி வழங்க் குளாளா
அருண கிரியார் உறவாளா
தள்ளி வைப்ப முகல்லத்
தாங்கிக் காப்ப துன்கடனே
துள்ளி யாடு மயில்மீ
துதோன்றிக் காட்சி தந்தாளே!

துச்ச மெனவு லகவாழ்வு
துணிந்தா ருயிரைப் போக்கவன்று
அச்ச மின்றி யன்பனான
அருண கிரிநா தனருணைநீள்
உச்சி மலைமே லேறிப் பாய்ந்
துருண்டு வருமவ் வேளையிலே
அச்சங் கொள்ள வேண்டாமென்
அணைத்தாட் கொண்ட குமரேச!

அன்ற ருணகி ரியார்துயர் நீங்
கருளி யாண்டு கொண்டவாறே
யின்று முனத டிதஞ்சமென
நின்றி ரங்கெ ளியேன்தலைமேல்
நின்தி ருவடி பதித்துவந்தே
நிறைஞா னதீட்சை நல்கியாளாய்
குன்று தொறாடு பழனிவேலா
குஞ்ச ரிவள்ளி மணவாளா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறு படைவீ டுற்ற
ஆறு மாமு கப்பொருளே
பேறு தருதெய் வமெனப்
பேதை யேன்யான் வந்திரந்தேன்
ஊறு தருநோய்துன்பம்
உறுத்தா தெனையண் டியருளாளாய்
ஏறு மியிமீ தேறி
விளையா டுபழ னிமலையானே!

கந்தனே நீய லால்வேறு
கதியருள் கின்ற தெய்வமுண்டோ
சிந்தையே திளைத்த ஆணவம
லச்செருக் கினனாம் சூரொழியக்
குந்தமே யேவித் தேவர்க்காயக்
கொடுமைகள் நீக்கி யருளாண்ட
எந்தையே யின்று மீழவர்க்காய்
இனவதை தடுத்தாள் பழனிவாழ்வே!

தெய்வ துள்நீ யேயான்ம
சேவை யாள னெனுமுண்மை
பொய்ய தாகா தெமையொடுக்கு
புன்மை யரெண்ணம் சிதைந்தொழியக்
கையு றைவே லையேவிக்
கசட ரைத்த டுத்தாளாய்
வைய மும்வா னுமேற்றியேத்தும்
வரதா பழனி மலையானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கயவர்க் கஞ்சி யீழமக்கள்
    காடு பதுங்கு குழிகளிலே
உயிரை யேகை யிற்பிடித்து
    ஊணு டைதா னுமின்றிவாடத்
தயவு தாட்சிணியமின்றிச்
    சண்டா ளர்குண் டழித்தொழிக்கும்
துயரி னையீ ழுங்காண
    சூரரை யொழித்த பழனிவேலா!

பரிவார் கண்டா வளைக்கவிருள்
    பணிவா யுரைத்தே னுன்முன்னே
புரியா திருத்தன் முறையல்லப்
    போரின் கொடுமை சிறிதல்லக்
கரியாய் மாறா தீழவூர் மண்
    கயவர் தொடுத்த போராலே
தரியா வந்தி துசமயம்
    தாங்கிக் காவாய் பழனிவேலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காசி கங்கை

தருமமே முதல நான்கும்
தரணியின் வேட்டோர் யாரும்
வருகெனத் திரைக்கை காட்டி
வந்தவர் பவங்க ளோடப்
பொருது நீள் அலைகள் வீசிப்
புண்ணியக் காசி யூரின்
கருவினை போக்கு தீர்த்தக்
கங்கைகண் குளிரக் கண்டேன்

அரிதரி துகாசி கங்கை
யாற்றுநீ ராடல் அஃதி
னரிதங்கு வினைதீர் தீர்த்த
மாடியி யற்கை எய்தல்
அரிதினு மரிதே காசி
யருட்பெருந் துறைபிறத்தல்
அரகர சிவவென் றோதி
அருட்கங்கை யாடி னேனே

காசிகங் கையிற் குளிக்கும்
காகமும் வெள்ளை யென்ப
காசிநீ ராடு வார்தம்
கன்மங்கள் தொலைவ தாகும்
ஊசிகள் குத்து மாப்போல்
உடலினைச் சிலிர்க்க வைக்கும்
காசிநீ ராடி எளியேன்
கன்மங்க ளைய நின்றேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறு

கழிந்தன தொடரும் கன்ம வினைகள்
இழிந்தன மும்மல இருள்சூழ் துன்பம்
ஒழிந்தன ஆசைகள் உயர்ந்த துள்ளம்
கழிவினை தீர்த்தகங் கைநீ ராடியே!

கரையெலா மெரிவன கழிந்தார் பொய்யுடல்
திரையெலா மலைவன தீக்கடன் பிண்டமே
கரைப்பவர் அஸ்திகள் கங்கை யெங்கணும்
புரையறு காசியூர் புண்ய தீர்த்தமே

நீறு பூத்த மேனியர் அங்கெலாம்
ஆறு மனத்தராய் அரன்புகழ் பாடுவர்
மாறு சிங்கமும் வாகன மாகுமால்
தேறு காசியூர் தெய்விக மானதே

கூட கோபுரம் கும்பிட வாலயம்
மாட மாளிகை மாமணி மண்டபம்
ஆடு பாதனின் அடியவர் சத்திரம்
ஓடு கங்கையின் ஓரம தெங்குமே

மொட்டைத் தலையினர் மோனசு வாமிகள்
செட்டி நாட்டவர் திருவரு ளாளர்கள்
கட்டிள மங்கையர் காளையர் கூட்டமும்
கட்டு மரங்களிற் கங்கைநீர் சேர்ப்பரே

ஈசனார் திருமுடி இனசந்த கங்கையே
நேசமார் மனுக்குலம் நிறைவு பெற்றுய
மாசுதீர் தீர்த்தமாய் மண்ணிற் பாய்வது
பூசனைக் குரியநீள் புண்ணிய கங்கையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்திய காலத்தா ருயிர் போக்கவென்
வந்தருள் மடங்களில் வழிபார்த் திருப்பவர்
முந்தைய வினைகள் முழுதற மூழ்குவார்
சந்தடி மிக்கது தண்ணீர்க் கங்கையே!

தேடு பரம்பொருட் திவ்விய பூசைநீர்
பீடு நீங்குறப் பேரருட் தீர்த்தமாய்
ஓடு கங்கையின் ஊற்று இமயமென்
ஆடு பாதத்தன் அமர்ந்த கைலையே!

முன்வினைத் தோசமும் மும்ம லத்தெழு
புன்மையும் போக்குயர் புண்ய தீர்த்தமாயச்
சின்மயப் படுத்துமே திருவார் காசியூர்
[illegible]ன்னிகர் பிறிதிலாத் தண்நீர்க் கங்கையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவொற்றியூர்

மங்கையைச் சடைம றைத்தாய்
   மாமனார் தலைகொய் வித்தாய்
திங்களைத் தலைசு மந்தாய்
   திருத்தொண்டன் மகவறுப் பித்தாய்
அங்கமெ லாம்நீ றாக
   ஆடினை சுடலை தன்னின்
எங்ஙனுன் கூத்து ரைப்ப
   திருவொற்றி யிருந்தாள் சிவனே!

ஆன்மீக வளர்ச்சி குன்றி
   யாணவப் பிடியுட் சிக்கி
ஊன்மிக வளர்க்கும் நோக்கி
   னூக்கமே கொள்ளஞ் ஞானர்க்
கான்மிக வுயர்ச்சி யின்றி
   அருளினை யண்டு கின்ற
மான்மிய மிலையென் றோர
   வைத்தரு ளொற்றி வாழ்வே!

ஆயுதத் தாலே தீர்வு
   அடையவெண் ணரசா ரந்த
ஆயுதத் தாலே யோர்நாள்
   அழியுமுண் மையு ணர்ந்து
வாயிதம் பேசித் தமிழர்
   வளமுய ராட்சி நல்கும்
ஏயிதம் காண வாளாய்
   இறைவதி ருவொற்றித் தேவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படையா னுயிர்க ளைவதைத்தே
பசுத்தோல் போர்த்த புலியென்னும்
நடையாய்த் தமிழ ரையாளும்
நயவஞ் சனையா ளராட்சியிலே
கடையாய் வாழ்ந்த டிமையாகக்
காலம் கழித்த தினிப்போதும்
விடையாய் விமோச னமெமக்கு
விளைப்பாய் திருவொற் றியூர்க்கோவே!

மன்னவன் கடைமை நாட்டு
மக்களைக் காத்த லன்றித்
தன்னவர் பிறரென் பேதந்
தரம்பிரி யாட்சி யாலே
அன்னவர் குலதா ரோங்க
அதிசலு கைவ ழங்கும்
தென்னவர் செயலி லீழம்
தேய்வதோ திருவொற் றிவாழ்வே!

புத்தனின் வேதம் போற்றும்
புண்ணிய வான்க ளாட்சி
இத்தனை காலம் நாமும்
ஏய்வுற வேய்ச்சே மாறச்
சொத்தினைச் சுதந்தி ரத்தைத்
தொடர்ந்துமே பறித்த டக்கி
வைத்தமை முறையோ காணாய்
ஒற்றியூர் வாழும் தேவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாடு கன்று நல்லதொரு
மனைவி மக்கள் சுற்றத்தார்
வீடு மனையி ருந்தென்ன
வேத முதல்வ னாயாளும்
ஆடு பாதத் தாயுன்னை
யண்டி யண்டித் தொழாரென்னின்
தேடு பேறா னந்தமேது
திருவொற் றிசிவ பெருமானே!

பாரிலே சுதந்ர பானம்
பருகவே துடிக்கும் வேளை
போரினால் மக்கள் தாகம்
போக்கவே முடியா தென்ப
தோர்விலா ஆட்சி யாளர்
தேர்ந்தினி யேனு மாளின்
தீருமே பகைமை நாட்டில்
திருவொற்றி யூர்வாழ் தேவே!

'செல்'வந் தநாடீ ழநாடென்னத்
தேச மெங்கும் பேசமந்தச்
'செல்'வந் தசோகச் செய்திகேட்கின்
தொடைந டுங்கும் படைநடுங்கும்
பல்வி ழுந்த கிழவியுமே
பதுங்கு குழியோ டித்தேடும்
'செல்'வந் திறப்போ மென்பயத்தான்
திருவொற் றிசிவ பெருமானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்திவாள் கொண்ட வீனக்
காடையர் கூட்ட மங்கே
செத்தவூன் தலைகள் கொய்தே
சினவெறி யாடக் கண்டும்
பித்தநீ என்ற தாலோ
பேதறா மௌனி யானாய்
சித்தமே யிரங்கி யாளாய்
திருவொற்றி யூர்வாழ் தேவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீர்காழி

1. அம்மையே யப்பா காழி
அருட்சுடர் ஒளியே போற்றி
செம்மையே பெற்றுய் நீர்மை
தெளிவிலா எளியேன் போற்றி
பொய்மையாம் தேகம் நீங்கப்
புகலிட மாவாய் போற்றி
கைமையேற் கிரங்கி யாளும்
கடவுளே போற்றி போற்றி

2. வாதவூ ர்க்காய் மூட்டு
வைகைய டைக்கச் சென்று
பாதமே நோவச் சென்னிப்
பாரமும் சுமந்தி ளைத்த
ஆதியோ டந்த மில்லா
அருட்பெரும் சோதி யான
வேதனே சீகா ழிப்பால்
மேவிய அம்மை யப்பா!

3. திருஞா னசம்பந் தன்சீத்
தேவா ரப்பா பாடத்
திருஞா னப்பா லூட்டிச்
சேயை யணைத்தாட் கொண்டு
பெருஞா னமோத வைத்தே
பிறங்கு சைவம் காத்த
அருமே வுகாழி யம்மை
அப்ப! அணைத்தா ! ளாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. மாதொரு பாகா தீயேன்
மனமது நல்ல தன்றி
தீதொரு பொழுதும் நாடாத்
தினந்தினம் சிவமே யென்று
யாதொரு கவலை யின்றி
இருந்துனைப் பாடிப் போற்றப்
போதகம் செயாய்சீர் காழி
போந்தருள் அம்மை யப்பனே!

5. நின்று மிருந்தும் கிடந்தும்
நினைவெ லாமுன் பதமா
யென்று முளசை வந்தி
எடுத்தோ தியுல கறிக்க
அன்று சம்பந் தர்க்கா
யருளி யவாறின் நாயேற்
கின்ற ருளாய்சீர் காழி
இருந்த ருளம்மை அப்பனே!

6. நல்லா யென்மன் றாட்டமிது
கேளாய் ஞான மில்லாத
பொல்லா னென்னு யிர்பிரிக்கும்
போது நீற ணிந்திருந்து
சொல்லார் நின்பு கழ்பாடித்
தோத்தி ரிக்க வைத்துப் பின்
செல்லா யெடுத்து யிர்நீயே
சீர்கா ழியம்மை அப்பனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. பொல்லான் எமதர் மராசனவன்
போந்தெ னைப்பி டித்திழுத்தே
செல்லா தடுத்த ருளாண்டுனது
திருவ டிக்கீழ்க் கொண்டுசேர்த்தே
அல்லா னென்வி னையனைத்தும்
அகல மன்னித் தாட்கொள்ளாய்
கொல்லா மார்க்கண் டனுயிரினைக்
கூற்று தைத்தாண் டகாழியாரே!

8. சத்துப் போன வுடலருகே
தணியா வொளிவி ளக்கேற்றி
வைத்து நாயேன் உனைநாளும்
வாயா ரப்பா டிப்போற்றும்
பக்திப் பாடல் கள்சிலபோ
பக்கத் திருந்து படித்திசைக்கச்
சித்த மிரங்கி யேற்றருளாய்
சீகா ழியம்மை அப்பனே!

9. செத்தவர் உடல்தான் சாகும்
சீவனோ சாகா தென்றும்
புத்துடல் பெற்று மீண்டும்
புகுமது வாழ்வி லென்னு
மத்தக வுண்மை யென்னில்
அடுத்தொரு பிறப்பு வேண்டேன்
பத்தருக் கருள்சீர் காழிப்
பதியுறை யம்மை அப்பனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. இருந்து நாளும் கோணகுளம்
இரட்சித் தருளும் விநாயகனார்
பொருந்து கோயில் நேர்முன்னே
புகலு பெத்தா ~~[illegible]~~ ஊற்றோரம்
வருந்து மன்பர் அமைசமாதி
வடிவம் பூசை கண்டேத்த
இரந்து நின்றேன் சீராழி
இறைவ அருளாய் அருளாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருஅண்ணாமலை

அத்தனே யோலம் அண்ணா
மலையு டையா யோலம்
முத்தனே யோலம் முக்கண்
முதல்வவூ லமாரு ரார்சொல்
பித்தனே யோலம் பேசு
பேரொளிப் பிழம்பே யோலம்
சித்தனே யணைத்தா தாரம்
செய்யா யோலம் ஓலம்

தெய்வ சிந்த னையின்றிச்
சிற்றின் பவாழ்வுக் காகநாளும்
பொய்பு ரட்டு கள்பேசிப்
பொய்யு டல்வ ளர்த்துவந்தேன்
ஐய நீய லாவென்னை
ஆரெ வரினி நெறிப்படுத்தி
யுய்யும் வழியி னையோம்ப
அண்ணா மலையு டையாரே!

மனமதைச் செம்மை யாக்கி
மாசிலா மனித னாகச்
சினமது கொள்ளா காத்துச்
சிற்றின்ப வவாவ டக்கித்
தினமுனைப் பாடிப் போற்றித்
திருவருள் அண்டி வாழ
அனந்தசு கமளித் தாளாய்
அண்ணாம லைவாழ் தேவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த வினைகள் யாவும்
வழிமா றவோட் டியெளியேனின்
சிந்தை தெளிய வைத்தே
திருஞா னசம்பந் தன்போலச்
செந்தமிழ் சேர் சைவம்
செகமெ லாம்ப ரப்பருளாய்
எந்தை அண்ணா மலைமீ
தெழுந்த ருள்பு ரியுஞ்சிவனே!

விஞ்ஞா னகாலம் என்று
வீணே பேசிப் பேசி
அஞ்ஞா னராக மாந்தர்
அகங்கா ரவாழ்வு நாடா
மெய்ஞ்ஞா னமதே யின்று
மெருகிட் டவிஞ்ஞா னமென
அஞ்ஞா னர்க்கு ணர்த்தாய்
அண்ணா மலைவாழ் சிவனே!

புத்தனு மிந்து வாயே
புவியினிற் பிறந்தி றைஞானப்
பித்தனு மாகிச் சமயம்
பிறிதொன்ற மைத்தே பிரிந்தான்மெய்த்
தத்துவம் பேச வேண்டும்
சதுர்மறை யறிவு ஞானமெற்கு
அத்தனே அருளா யருளாய்
அருட்தி ருஅண்ணா மலையானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தமே கலங்கித் தேம்பித்
திருவருள் வேண்டி யுன்முன்
பத்தனே யாக வந்து
பாமலர் சாத்து மேழை
எத்தனை காலம் வேண்டி
வேண்டி யிரப்ப ஈச!
சித்தமே யிரங்கி யாளாய்
திருஅண்ணா மலைவாழ் சிவனே!

புத்தனைப் போன்றே ஞானப்
போதனை யாவும் செய்தே
புத்தொளி பெற்றுச் சைவம்
புவியினில் விளங்கச் சமய
தத்துவக் கரு விளக்கும்
தக்கவர் உலகுக் கின்று
அத்தனே வேண்டும் வேண்டும்
அருட்திரு வருணைச் சிவனே!

போரினா லடக்கி யாளும்
போக்கினை நாடி லங்கைத்
தேர்விலா அரசி னாட்சி
சீக்கிரம் வீழ்ச்சி காணப்
பாருளார் வெறுப்பைச் சீண்டிப்
படையுளே புரட்சி தூண்டிச்
சீருளா ராட்சிக் காளாய்
திருஅண்ணா மலைவாழ் சிவனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடிய பாடல் பத்தின்
  பரிவினை யேற்று நாயேன்
நாடிய கருமம் யாவும்
  நலம்பெறக் கிருபை கூர்ந்து
நீடிய சமயம் சைவம்
  நிலைபெற வளர்த்துக் காக்கத்
தேடிய ஞானம் நல்காய்
  திருஅண்ணா மலைவாழ் சிவனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருஅண்ணாமலை உச்சி

விண்ணா ருமலை யுச்சியிலே
வேண்டி ஞானம் வந்தேனைத்
தண்ணா ருமரக் கீழ்நிழலிற்
தவசி போல வீற்றிருந்து
கண்ணா லேதி ருநோக்கருளிக்
கதறி யழுநி லையாக்கி
அண்ணா மலையா யெளியனெனை
அடிமை கொள்ள நின்றாயே!

மண்ணார் மணிவா சகர்க்கு
மரக்கீ ழிருந்த ருளியவாறே
அண்ணா மலையுச் சியிலே
அடியார் சூழ மரத்தடியின்
உண்ணா முலையா ளுடனாய்
யோகத் திருந்த திருக்காட்சி
கண்ணா ரக்கண் டுகண்ட
டிமைகொள் வாயென் கருதினேனே!

அண்ணா மலையி டத்தே
அருளா ளர்ப லர்தோன்றிப்
பண்ணா ரப்பாட் டிசைத்துப்
பரஞா னிகளா யுய்யஞானம்
நண்ணா யிந்நா யிசைப்ப
நயமி லாத பாட்டெனவோ
கண்ணா ரக்காட் சித்தும்
கனிந்துள் ளடிமை கொண்டிலையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணார் தலங்க ளுள்ளே
   மருவு முத்தி பதமருளும்
அண்ணா மலையி டத்தே
   அருட்சோ தியாகி நின்றாயை
எண்ணா திருந்தே னெண்ணி
   யெண்ணி யேத்து காட்சிதந்தாய்
விண்ணோ ரும்கண் டறியா
   வேந்தே யண்ணா மலையாரே!

இல்லைநின் அருளே யாகின்
   ஈசனே மீட்சி யின்றி
அல்லிருள் மலத்துட் சிக்கி
   அறிவிலி யாய்நின் பாதம்
ஒல்லுநெ றியறி யாவிவ்
   வுடலெடுத் ததன்நோக் கிழந்து
அல்லலு றுவமு றையோ
   அண்ணா மலைவாழ் கோவே!

செல்லும் வழிய றியாதுதெருத்
   தெருவா யுலைந்த லைவேன்வாய்
சொல்லித் துதிக்கும் பாடல்கட்
   கிரங்கி யேனுந் துணை நின்று
மெல்லக் கரம சைத்துஞானம்
   மேவு நெறிகாட் டியருளாளாய்
அல்லும் பகலு மர்ச்சித்தமார்க்
   கண்டார்க் கருளி யபெம்மானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு இராமேச்சுரம்

1. கத்து கடல்வீ சுதிரை
   கரைத டவிப்பு ரண்டலைய
முத்தி பதம எிக்கும்
   மூர்த்தி தலந்தீர்த் தமொன்றவருட்
சித்தர் பலர்பா டலுடைத்
   தென்ன கத்திற் காசிநகர்
ஒத்த தலமி தென்ன
   ஒளிர்ப திஇரா மேச்சுரமே!

2. ஈழத் தரக்கர் வேந்தன்
   இராவ ணன்ற னைச்செற்ற
தாழ்வி னைநீங் கராமன்
   தரிசித் தேத்த வேண்டி லிங்கம்
ஆழி சூழ்தீ விலமைத்
   தர்ச்சித் துநின்ற திருக்கோயில்
ஊழ்வி னைபோக் குதீர்த்தம்
   ஒருங்க மைஇரா மேச்சுரமே!

## வேறு

3. வரையினை யொத்த தோளும்
   வரத்தினால் வலியும் மிக்க
குரைகடல் சூழி லங்கைக்
   கொடுவினை யாள ரான
அரக்கரைக் கொன்ற தோசம்
   அகலமால் அமைத்த கோயில்
பரகதி யளிக்க வல்ல
   பதிதிரு இராமேச் சுரமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. விண்ணினி லெடுத்து வந்த
விசுவலிங் கத்தொ டிந்த
மண்ணினிற் சீதை செய்த
மாசிலா இர்ராம லிங்கம்
விண்ணுள தேவர் தாமும்
விரும்பிவந் தேத்தி நிற்க
மண்ணினில் மாலமைத்த
மாதலம் இராமேச் சுரமே!

5. திக்குக ளெட்டு முள்ளார்
திரள்திர ளாக வந்து
பத்தியி னுந்த லாலே
பரவச நிலையி லானோர்
அக்கினி முதலாய்த் தீர்த்தம்
அறுமூன் றைந்து மாடிப்
பக்குவ நிலையை யெய்தும்
பதிதிரு இராமேச் சுரமே

6. பலவுநாட் செய்த பாவப்
பழியெல்லாம் தானே நீங்க
அலையினாற் சூழ்ந்த தீவில்
அயோத்தியி லவத ரித்த
சிலையினான் செய்த கோயில்
திருஇரா மேச்சு ரத்தை
நிலையிலா வாழ்வு மாந்தர்
நிதம் நிதம் தொழுமின் வந்தே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செருக்கல் ஸ்ரீவிநாயகர்

1. ஆனை முகத்தனை ஐந்துக ரத்தனை
பானை வயிற்றனைப் பாசங்கு சத்தனை
ஆன செருக்கலின் ஐயனைக் கைதொழ
வான வர்சுக வாழ்வது கிட்டுமே

2. வேத நாயகன் விண்ணவர் நாயகன்
சோதி நாயகன் சொற்றுணை நாயகன்
ஆதி செருக்கலின் அமர்ந்தவி நாயகன்
பூத லத்துறை புண்ணிய மூர்த்தியே!

3. முன்னவன் முதலவன் முக்கண் ஐங்கரன்
தொன்முனிக் கருளிய தும்பி மாமுகன்
குன்றிடா வருள்கொழி செருக்க லென்பதி
யொன்றியி ருந்தருள் ஓங்கா ரத்தொள்ளே!

4. ஊரெலாம் வெண்ணீ றுயிரெ லாமன்புள்
நீரெலாம் தீர்த்தநீர் நிறைவெ லாம்திரு
சேரெலாம் திரள்பொலி செழித்தோங் கூரதாம்
ஏர்மலி செருக்கலே ரம்பன் சூழலே

5. நீறணி மேனியர் நிறையுட் சீலர்கள்
தேறிய சிந்தையர் திரும றைசொல்வார்
தேறலர் 'செல்'லுமே திசைதி ரும்புமால்
கூறவும் தகுவனோ குஞ்ச ரன்புகழ்

6. ஐம்புலன் அடக்கியே ஐந்தெ ழுத்துணி
யெம்மன மாந்தரும் இன்ம னத்தராய்த்
தம்வச மிழந்தருட் சன்ன தத்தராய்க்
கும்பிடு திருப்பதி செருக்கற் கோட்டமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. கற்றவர் மற்றவர் கழனி யாளர்கள்
நற்குண வாளர்கள் நடுநி லையினர்
உற்றசா வச்சேரி யூரு யர்வுற
நற்றுணை யருள்வி நாய கன்பதி

8. ஆடுகள் கோழிகள் வதைப்ப தங்கிலை
நாட்டிய மாதரின் நடமுமங்கிலை
பாடுவார் திருமுறை பரவ சத்தொடு
கோடுடை விநாயகன் கொலுவி ருப்பனே!

9. விழிப்புனல் சிந்தவே வேண்டு வார்வரம்
அளிப்பவன் அருட்பதம் அனுதி தினந்தொழ
களிப்பவன் எய்தியே காத்த ருள்செய்வான்
செழிப்புனல் தெங்குசூழ் செருக்கன் பிள்ளையே!

10. வானுயர் தென்பனை வளமார் மாபலா
கோனுயர் உழவரின் குடிசை கொல்லைகள்
ஆனினம் வானரம் அங்கு சூழ்தர
வானவர் தலமென வணங்க ருட்பதி

11. இறைவனை ஏத்துக இதய மொன்றவே
இறைவனைப் போற்றுக இசையைப் பாடியே
இறைவனை வேண்டுக இடர்கள் நீங்கவே
இறைவனும் இசைந்தருள் இனித ருள்வனே!

12. வான வரும்புவி வந்துவந் தேத்துயர்
கோண குளத்துறை குஞ்சரத் தானருள்
ஆன இராசையன் அன்பினாற் செருக்கல்வாழ்
ஆனை முகன்புகழ் அகவினன் யார்க்குமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கேதீச்சரம்

1. ஆதியும் அந்தமு மில்லா
அருட்பெருஞ் சோதியாம் நீயே!
வேதமுஞ் செந்தமிழு மோங்கி
விளங்குகே தீச்சரத் தின்பால்
ஆதிநின் னாடல்கள் குன்றா
அருட்டுறை யாகவ மர்ந்து
பூதியர்க் காயருள் புனையப்
பொருளேநின் பூங்கழல் போற்றி!

2. ஆடல தாயம்ப லத்தே
ஆடுகின்ற நின்திருப் பாதம்
மூடிய மாயை இருட்குள்
மூழ்கித் தினந்தத் தளித்தே
பாடுமின் நாய்க்குணன் காணப்
பாலித் தருளுவ தென்றோ
தேடியும் மாலயன் கண்ட
றியாத்திருக்கே தீச்ர சிவனே

3. தண்டமிழ் ஞானசம் பந்தன்
தவித்தழ ஞானமார் பாலை
உண்டு தமிழ்மறை யோதென்
உவந்தன் றளித்தருளி யதேவே
மண்டிருள் சூழ்மலத்துட் சிக்கி
மயங்கெனை மீட்டணைப்ப தென்றோ
தெண்திரை வந்துவந்து மோது
கரைத்திருக்கே தீச்ர சிவனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. மண்ணார் மணிவாச கர்க்காய்
வைகைமண்சு மந்து நொந்த
வண்டா ரணிமலர்க் கொன்றை
வான்மதி கங்கையணி சென்னி
கண்டா ருமுள முருகிக்
கடையேன் தொழுவதென் றென்னத்
திண்டா டுமடியேற்கி ரங்கி
யருள்திருக்கே தீச்ர சிவனே!

5. அல்லும் பகலுமுனை வேண்டி
அர்ச்சித்த மார்க்கண் டனுயிர்
கொல்லும் படியாக வந்த
கூற்றைக்கா லாலுதைத்தே யாண்ட
எல்லை யிலாவருட் பாதம்
எளியனேன் பற்றுவ தென்றோ
தில்லை யெனநட மாடு
பதிதிருக்கே தீச்ர சிவனே!

வேறு

6. ஆர்த்த பிறவித் துயர்தொடரா
றைந்து மடங்கி மூன்றுங்கெடச்
சேர்த்த முன்வி னைப்பயனும்
தீண்டா தகலப் பாலாவித்
தீர்த்தப் புனலா டித்திருநீ
றணிந்து சிவசிவ வென்பானைச்
சேர்த்த ருள்பா லிப்பதென்றோ
திருக்கே தீச்ர முறைசிவனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. தேவ சிந்தை சிறிதுமிலாத்
தினமும் வாழ்வி லிதுவரையும்
பாவச் செயலி லாழ்ந்துநின்ற
பாவி யேனுள் பக்குவமாய்த்
தாவு கொள்ள நின்னடிக் கீழ்த்
தாங்கிக் காப்ப தெந்நாளோ
தேவர்க் கிரங்கி நஞ்சுண்ட
திருக்கே தீச்ர முறைசிவனே!

8. இன்றோ நாளை யோவென்றோ
இவ்வு யிர்பி ரியும்வேளை
நின்றோ இருந்தோ சிவசிவவென்
நினது திருநா மமோதியோதி
மன்றா டுமாபக் குவமெய்த
என்னை மன்னித் அருளாளாய்
தென்நாட் டகத்தி யர்க்கருளிய
திருக்கே தீச்ர முறைசிவனே!

9. உன்னாற் பிரயோ சனம்வேண்ட
உண்டெ னவுணர்ந் துன்புகழைப்
பன்னா ளும்பா டிப்பாடிப்
பணிந்து போற்று மிப்பாவி
தன்னாற் பிரயோ சனமிந்தத்
தரணிக் கேது மாகவருள்
செந்நா அப்பர்க் கருளிய
திருக்கே தீச்ர முறைசிவனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. அல்லா னாயி னுமிலங்கேசன்
அன்பிற் கிசைந்தன் நருளியநீ
பொல்லா னெனவே யெனைவெறுத்துப்
புறக்க ணிப்ப துவும் முறையோ
நல்லா னாக நாயெனக்கு
ஞான மூட்டி யல்வழியிற்
செல்லா திருந்த அருளாளாய்
திருக்கே தீச்ர முறைசிவனே!

11. நிலையா வுடம்பை வளர்த்தெடுக்க
நீசத் தனமா யுயிர்கள்பல
கொலையே செய்து செய்திந்தக்
கூட்டை நிரப்பி நின்ற பாபம்
தொலையா யெனவுன் சன்னதியிற்
தோன்றி யிரந்தேன் அருளாளாய்
அலையார் ஆழிக் கரையுறையும்
ஆதி கேதீச் சரசிவனே!

12. அருவே யுருவே அருவுருவே
ஆதி யந்த மிலாதவருட்
பெருமா னந்தப் பேரொளியே
பிறிதொன் றறியாப் பேதையேனுய்
குருவா யண்டி ஞானதீட்சை
கொடுத்த ருளிநின் திருவடியென்
சிரமேற் பதித்தாட் கொண்டணையாய்
திருக்கே தீச்ர முறைசிவனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ சுட்டிபுரம் அம்மன்

1. அகரமென உயிரனைத்தின் அன்னையான
அருவமரு வுருவ மாகி
சிகரபுத நெறிகடந்த தேவரோடு
முனிவர்கள் சேர்ந்து போற்ற
பகருமெழு பவமுழலும் சராசரங்கள்
படைத்தளித்து அருளிக் காக்கத்
திகழ்சுட்டி புரத்தலம் சார்ந் தடியார்க்குத்
திருவருளும் அம்பி கையே !

2. உலகோர்கள் தொழுமிமய மலையீன்ற
உமையவளே உம்ப ருய்யக்
குலமோங்கு மவுணர்கள் கொடுமையினை
யடக்கியின்னல் குறைக்க வல்ல
நலமார் விநாயகனை நம்பிவள்ளி
நாயகனை நயமாய்த் தந்து
தலமோங்கு சுட்டிபுரம் சார்ந்தடியார்
சஞ்சலங்கள் தாங்கும் தாயே!

3. அருட்கச்சி முதலான ஆலயம்போற்
சுட்டிபுரம் சிறக்கத் தங்கி
அருட்செல்வம் கொடுத்தேதன் னடிபோற்றும்
அடியாரை யன்பா யண்டி
உருச்செந்நெல் வாழையென வளர்ந்தோங்கி
உயர்விளைவீ வரணிமேலாம்
பொருட்செல்வம் பொருந்தியீழம் பொலியவருள்
புரிசுட்டி புரம்வாழ் தாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. ஐயனுடன் அம்மையாம்நீ அணைந்தருளி
அஞ்சலென அபயம் தந்து
வையமெலாம் படைத் தளைக்கும் வடிவுகாட்டி
வளர்சடையுட் பிறையும் காட்டி
செய்யவிரு பாதமதில் ஒன்றுசிவன்
பாதமெனத் தெரிய அன்பர்
உய்யவுயிர் உந்துதலம் சுட்டிபுர
மாயுலக மர்ந்த தாயே!

5. தொம் தொமென நடனமிடு சுந்தரேசர்
தோழியென அருகி ருக்கும்
அம்பிகையே ஆரணியாய்ப் பூரணியாய்
ஆதிசிவ சக்தி யாகி
உம்பரொடு முனிவர்கள் தொழுதேத்தும்
உமையவளா யுலகி யங்கத்
திம்திமென நடனமிடு தேவியாகித்
திகழ்சுட்டி புரம்வாழ் தாயே!

6. நீறிலங்கு மேனியர் நிறைமனத்தார்
நிதவிரதா சார சீலர்
பேறிலங்கு சைவாக மபுராணம்
பேசுநெறி பிசகா அன்பர்
ஆறிலங்கு அணிநகராம் வரணியூரின்
அருள் பரவக் கூடி வாழும்
வீறிலங்கு சுட்டிபுரம் வீற்றிருந்து
வெவ்வினைகள் போக்கும் தாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. ஆண்டுதொறும் வைகாசிப் பூரணையில்
அலங்காரத் திருவி ழாக்கள்
வேண்டுமிறை பக்தர்கள் வீதியெங்கும்
விதம்விதமாம் தோர ணங்கள்
காண்டற்கி னியகைலாசக் காட்சியினைக்
கண்டு கண்டுள் கசிய மக்கள்
தூண்டுமருள் வடிவாகிச் சுட்டிபுரம்
தோன்றியருள் சொரியும் தாயே!

8. கரகங்கள் சுற்றஎங்கும் முள்ளணிந்தார்
காவடிகள் ஆடி நிற்க
விரதாளர் வீதிவலஞ் செய்தேத்த
வேதியர் சொல் மந்தி ரங்கள்
அரகரவோ சையடியா ருளமுருக்க
ஆதிசிவ சக்தி யாயே
பரகதியின் வாயிலதாய்ச் சுட்டிபுரப்
பதிமேவி யருளும் தாயே!

9. நஞ்சுமிழு நெஞ்சர்கள் நயவஞ்சர்
நாசகுண பாத கர்கள்
கஞ்சியெனு மீயாத கயவர்கள்
தஞ்சமென நின்ற போதும்
வஞ்சமின்றி அஞ்சலென வரவேற்று
வாழ்விக்கும் தேய்வமாக
விஞ்சுபுகழ் கொண்டதலம் சுட்டிபுரம்
வீற்றிருந்த ருள்செய் தாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. ஏர்வளரும் பலவளஞ்சார் எழில் வரணி
மாணவர்கள் இதய மென்னும்
ஆர்வளரும் கழனிகளில் அழகுதமிழ்
விதையதனைத் தூவி அன்பாம்
கார்வளரும் நீர்பாய்ச்சிக் கலைகளென்னும்
பயிரதனை வளர்த்துக் காக்கச்
சீர்வளரும் சுட்டிபுரத் தலம் மேவித்
திருவருள்பா லிக்கும் தாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நந்தன் புலம் நாகபூசணி பதிகம்
## காப்பு

நந்தன் புலத்துறை நாகபூச ணித்தாய்க்கோர்
விந்தைப் பதிகமென்றான் வேற்பிள்ளை- எந்தையாம்
கோணங் குளத்தானைக் கும்பிட்டேன் அன்னையருள்
மாணுநூல் பாட மகிழ்ந்து

## நூல்

1. ஓங்கார உட்பொருளே யொளியதான
ஒப்புசிவ சக்திமய மதாகிநின்றே
நீங்காத வினைகளெலாம் நீங்கநீங்கி
நீடாசி புரிந்துலகு நிறைந்த தாயே!
ஆங்கார உள்ளன்றி வேறொன் றண்டான்
அம்மையுனைப் புகழுவனோ ஆதரித் தாள்
பாங்கார் வட் டக்கச்சி பழனஞ் சூழ்
பதியிலுறை நாகபூச ணியாய தாயே!

2. ஆறுபொறி சரவணத்தே அகிலம் போற்ற
ஆறுமுகப் பொருளாயே அணைந்துதோன்றி
தேறுநெறி யறியாத தேவர் மற்றும்
செகத்திலுள உயிரனைத்தும் தேற்றம் காண
பேறுதரு முருகனையே பெட்பா யீந்து
பிரணவத்தின் பொருளதனைப் பேச வைத்த
கூறுகலை யறிவுவளர் வட்டக் கச்சி
குலவியருள் நாகபூச ணியாய தாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. அன்புருவ மாயமர்ந்தே அரனார் பாகம்
அகிலமெல்லாம் ஆண்டருளு மாதி சக்தி
பின்புமணை வாளரையும் பிரிந்து சென்றே
பெருந்தவங்கள் புரிந்துபம்பை பெருமை பெற்றாய்
உன் தந்தை தங்கனிடம் உரிய யாகத்
துரிமையினைச் சிவனாருக் கொதுக்கக் கேட்ட
அன்பொழுகு தெய்வமாயே வட்டக் கச்சி
அமர்ந்தருளும் நாகபூச ணியாய தாயே!

4. தொம்தொமென நடனமிடு சுந்த ரேசர்
தோழிநீயே அனைத்துலகும் அழிந்த காலை
அம்பலமி டமாகநட மாட ஈசர்க்
கடியெடுத்தே கொடுத்தனைத்து மியங்க வைத்தாய்
திம்திமென நடனமிடு உழவர் கூட்டம்
தினமுனது திருத்தலத்தே சிறக்க ஏத்தி
நம்பிவிதை நாட்டப்பேர் விளைவு நல்கும்
நந்தபுலம் நாகபூச ணியாய தாயே!

5. உண்டென்ற உத்தமர்க்கு உண்டு தெய்வம்
உள்ளன்பு பற்றாத உலுத்தர்க் கில்லை
அண்டி நிற்கும் ஆணவத்தை அகற்றி மேலாம்
அன்பதனை நெஞ்சகத்தே அண்ட அண்டின்
கண்டறிவார் தெய்வமங்கே காணு யிர்மேல்
கனிந்துறவு கொண்டவரே ககனம் காண்பர்
விண்ணளாவு தென்னைபலா விளங்கு வட்டக்
கச்சிநகர் மேவியருள் சொரியும் தாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. சீரார்வட் டக்கச்சி செழிப்பா யோங்க
சேருழவர் திருவிழாக்கள் செய்தே யேத்தப்
பாராதி அருள்மய மாய்ப் பக்தி மேவ
பண்புளங்கள் பரவியூர் பயனாய் வாழ
ஏராதி தொழில்வளங்கள் ஏற்றங் காண
இரணைமடு நீர்நிரம்பி இசைவா யோட
ஆராத தெய்வசிந்தை ஆர்வு காட்டி
அம்பிகையாய் நந்தபுலத் தருளும் தாயே!

7. தாயான நினதருளைத் தயவாய் வேண்டித்
தலைமதிலே மடைபொங்கல் தகவேவைத்துக்
காயாத பயிரினங்கள் காய்த்து ஓங்க
காராளர் களஞ்சியங்கள் நிறைந்து காண
ஓயாதே யுன்நாமம் உச்சரிக்கும்
ஊரார்கள் உளம் நிறைவா யுயர்ந்தே அன்பு
தேயாதூர் காத்தருளைத் தினமு மீயும்
தெய்வம்நீ நாகபூச ணியாய தாயே!

8. தானென்னும் ஆணவமே தாவி யுள்ளம்
சாருமந்தச் சகமாயை தானுங் கூடித்
தானென்ற அகங்காரம் தலைக்க தேற்றித்
தன்னைத்தான் அறியவிடா தடுக்கும் காலை
ஊனொன்று பற்றதனை உதறித் தன்னைத்
தானறியும் தகமையினைத் தமத தாக்கின்
வானொன்ற வழியருளும் வட்டக் கச்சி
மகிழவுறை நாகபூச ணியாய தாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. மக்களிடை கடையராகி மதியே யில்லார்
மதிப்பில்லா மடையராக மண்டி யிட்டு
தக்கவொரு உதவிதனைத் தமக்காய் வேண்டித்
தன்குலத்தார் வழக்குகளைத் தரிய லர்க்கு
எக்கணமு மெடுத்திங்கு ஓத வின்று
எம்மிடையி லிருக்கின்றார் ஈனராக
ஒக்குமவர் மனம்மாற உதவி நிற்பாய்
உலகாளும் நாகபூச ணியாய தாயே!

10. பூரணிநீ புரந்தகிநீ புவனமெல்லாம்
போற்றுமைநீ புராதனிநீ புலமைத்தெய்வம்
நாரணிநீ புங்கவிநீ நாரி யும்நீ
நம்பிசிவ சக்திநவ காளி பாரி
ஆரணிநீ ஆதிபரா சக்தி யாகி
அவனியெலாம் ஆண்டருளும் அனைநின் நாமம்
ஆர்வமதா யன்புருகிப் பாடி நின்றேன்
ஆண்டருள்வா யடியேனுக் கன்பு கூர்ந்தே!

11. செந்தமிழும் தமிழினமும் சிறந்து வாழி
சேரீழம் தனியரசு செய்து வாழி
சந்ததமும் இறைசிந்தை தழைத்து வாழி
தரணியுளோர் சைவமதம் சார்ந்து வாழி
விந்தைமிகு விளைவெய்தி யுழவர் வாழி
வெஞ்சினமும் வீண்பகையும் விலகி வாழி
நந்தபுலம் வயல் நடுவே நயந்து றையும்
நாயகியே நாடினிது காத்து வாழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறிக்கடவை அம்பாள் திருப்பதிகம்

பொல்லா வினைகளெலாம் போக்கியடி யார்க்கருள
வல்ல பொறிக்கடவை வாமிக்குச்- சொல்லும்
திருப்பதிகஞ் சோபித்தே தேசஞ் செழிக்கக்
கருணைபொழி கற்பகமே காத்து.

## பன்னிரு சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

அண்டமொரு பதினான்கு மமரரய
  னரிமற்று மனையதேவர் தொழுதேத்து
மகிலாண்ட ஈஸ்வரியே அத்தனிட
  பாகமாக அமர்ந்தாளு தேவியாகி
அண்டபகி ரண்டமெலா மருளொளியீந்
  தடியவரை யொருநாளு மல்லலண்டா
வண்ணமிகு அருள்வடிவாய் நின்று காக்க
  அவனிதனி லவதார மாய்த்தோன்றி
விண்ணொடுமண் வியாபகமாய் வெவ்வினைகள்
  விளைப்போரின் வெஞ்சினங்கள் வெகுண்டோட
அரனோடண் டிவிளையாடு தத்துவத்தால்
  மேதினியி லுன்சத்தி விளங்கநிற்கும்
மண்டலம்போற் றுமாதெய்வம் நீயல்லால்
  மனதினிலே நினைக்கவொரு தெய்வமுண்டோ
மருள்நீங்கப் பொறிக்கடவை மருவியேத்து
  மடியார்கள் மாணஅருள் அன்னைநீயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரிச்சங் கொத்த வடிவமான கழுத்ததனில்
வச்சிரமணி மாலையாட
வார்குழற்சென் னியிற்பச்சை வைடூரிய ம்பதித்த
பொன்னுச்சிப் பட்டமாட
சிலம்பணிதி ருப்பாத மிரண்டுந்தித் தமியெனவே
தாளவோசைக் கிசைந்தாட
சேர்கச்சை வடமொட்டி யாணங்க ணையாழி
சென்னிமுடி [illegible]
வலம்வருமெய் யடியார்கள் வாயார வாழ்த்தியுனை
வரங்கேட்டு நின்றாட
மானாட மழு அஞ்கு சம்பாச மாய்மங்கை
சிவகாமி நீயுமாட
மலம்நீங்கி முத்திகாண மன்றாடு மைந்தனிவ
னுன்புகழைப் பாடியாட
மாநிலமே மகிழ்ந்தாடப் பொறிக்கடலை மருவிவந்து
வரமளிக்கு மன்னை நீயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பொல்லாப்பிள் ளையாயி னும்பெற்ற பொறுப்பதனைப்
புறக்கணிக்குந் தாயுமுண்டோ
புவியினிலே தாய்மார்தம் சேயினையன் போடணடிப்
புத்திமதி புகட்டிநிற்க
அல்லைப்பின் னையெனநீ அடாதென்னை விழலிந்த
அவனிதனி லல்லலாவேன் (அல்லலண்டும்)
அடியரெலாம் கண்டிந்த அன்பிலாச் செய்கைக்குனைத்தான்
எள்ளிமிக நகைப்பரம்மா
நல்லதொரு தாயெனது நல்கூர்தல் தீர்ப்பாயென
நம்பியுனை நாடிவந்தேன்
நடுத்தெருவில் விடுவாயேல் நல்லவனென் றெனையார்தாம்
நயமாக அணைப்பரம்மா
சொல்லவெனி னுன்கணவர் சுடலைவாசி சொந்தபந்தம்
பாராட்டார் சொல்லி யென்ன
தொன்மைமிகு பொறிக்கடவை தோன்றியடி யார்க்கருளைச்
சொரிகின்ற அன்னைநீயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. தாயான உனக்கிந்தத் தரணிதனிற் சாதிக்க

  இயலாத தெதுவுமுண்டோ

நயமாக என்மைந்தன் குறைகளைதல் தாயென்ற

  தன்மையிலுன் கடமைதானே

சேயான நானுனது திருப்பாதங் களைப்பிடித்தே

  னினியுமுனைத் தப்பவிடேன்

தெருவினிலே நாமிருவர் சேர்ந்துருளல் சிறப்பல்லச்

  சேரடியார் சிரிப்பரம்மா

நாயான துநடுக்க டலில்நின்றும் நீர்நக்கி

  யுண்ணுமாப்போல் நானுமாகா

நயமான வுனதருளி னைநல்கி யெனையுமந்த

  அருட்கடலில் மூழ்கவைத்து

ஆயாசம் நீக்கியுன தடியார்க்கு மடியனாக்கித்

  தொண்டுசெய அண்டியாள்வாய்

அருள்பொங்கு பொறிக்கடவை அம்மனாக அடியாரை

  ஆட்கொள்ளு மன்னைநீயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மு**த்தி**நெ**றி காணவிந்த வாழ்வினிலே முயன்றறியா
**மூ**டனாகி முன் வினைகள்

**மு**ழு**மெ**னைத் தொட்டிழுக்கா ணவம்கன்மம் மாயையெனும்
**மூ**வ்வினையுள் மூழ்கி நின்றேன்

**சி**த்தி**நெ**றி காட்டியெனைச் சிறப்பாக்கி யிவ்வாழ்வில்
**சி**வதொண்டனாக மாற்றிச்

**தே**ச**மெ**ங்குஞ் சைவமொடு செந்தமிழுஞ் செழித்தோங்கத்
**த**மிழ்க்குரவர் செய்துநின்ற

**ப**க்தி**நெ**றி பரப்பியிந்தப் பாரினிலேபாதகங்கள்
**பு**ரிகின்றார் மனதுமாற்றிப்

**ப**ழமை**யி**னை நினைவுறுத்திப் புதுமையெனும் பசாசையோட்டி
**ப**ண்புள்ள மனிதராக்க

**நி**த்தியகல் யாணியான நீயிந்த நீசகனின்
**ம**லம்நீக்கி நிமலனாக்காய்

**நி**லையாகப் பொறிக்கடவை கோயிலாய்க்கொண் டடியார்க்காய்
**நி**றைந்துவாழு மன்னைநீயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. பூரணிநீ சுமங்கலைநீ புராதனிநீ சுதந்தரிநீ
புட்பமதில் வீற்றிருக்கும்
புங்கவிநீ விளங்குசிவ சங்கரிநீ பூதநாதன்
சக்தியான புவிபோற்று
நாரணிநீ மனோதீத நாயகிநீ ஞானாந்த
நாதாந்த அன்னையான
நாச்சியார்நீ மகேஸ்வரிநீ நாகபூசணியம்மையாகி
நல்லடியார் வினைபோக்கும்
காரணிநீ சுந்தரிநீ கண்ணகைநீ சவுந்தரிநீ
நிரந்தரிநீ உலகமெல்லாம்
கற்பகவல் லியாகவருள் துரந்தரிநீ கமாட்சி
அம்மையுமா யெனையாளும்
ஆரணியுன் நாமமதை யன்போடுச் சரிந்துநின்றேன்
அருட்கண்கள் திறந்தென்னை
அன்பொடண்டி யிரட்சிப்பாய் பொறிக்கடவை அண்டிவாழும்
அருளான அன்னைநீயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. இன்றைக்கோ நாளைக்கோ இப்பொழுதோ பிற்பொழுதோ
இந்தவுயி ருடம்பைவிட்டு
என்றைக்கோ பிரிந்துசெல்லு மென்பதனை யுணராத
இம்மாந்தர் வாழ்நாளில்
அன்பதனைப் புறக்கணித்தே யறத்தையண்டா தாணவமே
லீட்டாற்தம் அறிவிழந்து
அம்மம்ம; எத்தனையோ அநியாயஞ் செய்கின்றார்
அருளென்னும் பத்திநாடார்
இன்பமதைத் தேடிநிதம் எண்ணரிய கொலைகளவு
ஏமாற்றுப் பொய்புரளி
இத்தனையு மினிமைகாண இளமைத் துடிப்பாலே
இரக்கமின்றி இயற்றிநிற்பார்
கன்மமதைப் போக்கியவ ருள்ளமதிற் கடவுள்நம்
பிக்கையெனும் கருவை யூன்று
கருதரிய பொறிக்கடவை கண்ணகையம் மனாகவந்து
காத்தருளு மன்னை நீயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. இன்றெனக்கு வந்துற்ற இக்கட்டை யாரிடஞ்சொல்
லியிரப்பே னேழையிவன்
இடுக்கண்கள் களையவல்ல இனிதான தாயொருத்தி
நீயல்லா லெவருமுண்டோ
முன்னையவென் சென்மமதில் மூடன்நா னேதேனும்
மோசங்கள் புரிந்தேனால்
முதுவினைகள் தொடர்ந்தின்னும் மோதாதே பேதையினை
முழுமனித னாகமாற்றாய்
அன்றொருநாட் சம்பந்த னுக்கிரங்கி யருள்முலைப்பாலை
யூட்டியபோ லின்றெனக்கும்
அமிழ்தினுமி னியதமிழாம் அருள்மொழியைக் கரைத்தினிதே
சுவைக்கவெந்தன் நாவி லூற்ற
அன்னவாக னமீதேறி வந்துனது அடியானின்
முன்தோன்றி யருள்செய்வாய்
ஆதியாயே பொறிக்கடவை ஆலயத்தில் அம்மனாக
இருந்தருளு மன்னைநீயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. எத்தனைபி றப்புக்க ளிப்புவியி லெடுத்தேனென்
    றிதைநானோ அறிந்திலேன்
இனிமேலுஞ் சென்மமெடுத் திப்புவியி லின்னல்கள்
    தாங்கிநிற்க இயலாதம்மா
முத்திதரு வாயென்றே முழுமனதா யுனைநம்பி
    முறையிட்டேன் வேண்டியின்று
முகம்மலர்ந்தே வந்தெனது முன்தோன்றி மன்னித்து
    மும்மலமும் போக்கியாள்வாய்
பத்தியாயுன் புகழ்தன்னைப் பதிகமதாய்ப் பாடிவிட்டேன்
    பலபேரும் படித்தேத்த
பவானியுனக் கினியேனும் பாசமிது பிறந்திடாதோ
    பாலகனைக் காத்தாள்வாய்
அத்தனிட பாகமதி லண்டியிருந் தகிலமெலாம்
    ஆக்கியாளும் உலகமாதா
அழகான கரைச்சிநகர் அருள்பொங்கப் பொறிக்கடவை
    அமர்ந்தருளு மன்னைநியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழி

ஏர்கொண்டு வயலுழுதே யெல்லோர்க்கு முண வூட்டு

மெழிலுழவர் இனிதுவாழி

இடையிலாத்தெய் வநம்பிக்கை இதயமதிற் குடிகொண்ட

நல்லடியா ரினிதுறவாழி

சீர்கொண்ட சைவநெறி தெளிந்ததன்ப டியொழுகு

பார்ப்பனர்கள் சிறந்துவாழி

தெய்வவழி பாடியற்றி மக்களது சிந்தைமிகப்

பக்குவமாய்த் திருந்திவாழி

கார்மேகங் கூடிநிதம் கனமழையாய்ப் பொழிந்திங்கு

கமநிலங்கள் செழித்துவாழி

கவிபாடு புலவர்கள் கருத்துடைய கவிதைகளாய்க்

கனகமழை பொழிந்துவாழி

நீர்மேவு வயல்களெல்லாம் நீர்நிறைந்து நெற்பயிர்கள்

நிறைகதிரா யோங்கிவாழி

நிலைகொண்டு பொறிக்கடவை நின்றருளு மம்மையான

நிரஞ்சனியே நிறைந்துவாழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழறு பதிகம்

1. நாளென் செய்யும் கோளென்
செய்யும் நமனும் என்செய்வான்
ஊழென் செய்யும் உடலை
உறுத்துநோ யென்செயும் அரச
குழல் செய்யும்கோ ணகுளம்
தும்பி முகன்திரு வுள்ளம்
ஆள்க்கொண் டஅதனால் அவைமிக
நல்ல நல்ல அடியார்க்கே!

2. திங்கள் புதன்வி யாழன்
செவ்வாய் ஞாயிறு வெள்ளி
பொங்கிரா குகேது சனியாம்
புகல்நவக் கிரகங் களென்செயும்
தங்கி யருள்கோ ணகுளம்
விநாயகன் தாங்கி யாட்கொளப்
பங்க மிலையவை பலன்மிக
நல்ல நல்ல அடியார்க்கே!

3. பற்றிய கிறுதி வாய்வுமூலம்
பகர்தலை வலிமண் டைக்கனம்
முற்றிய தொய்வு பீனிசம்
முடக்குவா தம்நித் திரையின்மை
நற்கதி யருள்கோ ணகுளவி
நாயகன் ஆட்கொண் டதனால்
தொற்றிநோய் தொடரா தலைமிக
நல்லநல் லசுகம் அடியார்க்கே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. அல்லற் படுத்தும் அடங்கா
முனிபேய் பில்லி சூனியம்
தொல்லை கொடுத்து நாளும்
துன்புறுத் துதொற்றுநோய் பலவும்
நல்லன் கோண குளவி
நாயகன் ஆட்கொண்ட அதனால்
மெல்ல விலகியோ டுமவை
மிகநல் லநல்ல அடியார்க்கே!

5. வெய்யரவு பூரான் கொடுக்கன்
சிலந்திதேள் அரணை விடங்கள்
வைத்யத் துளகொடு விடங்கள்
வல்புலி கரடியா னைசிங்கம்
ஐயன் கோன குளவி
நாயகன் ஆட்கொண்ட அதனால்
செய்யும் தீங்கிலை அவைசெயல்
மிகநல் லநல்ல அடியார்க்கே!

6. சண்டா ளவஞ்சர் உலுத்தர்
சதியா ளர்கொலை ஞர்கள்
தொண்டா ளர்குமை மதியா
தூர்த்து கின்ற துரோகிகள்
பண்டார் கோண குளப்பதி
விநாயகன் பக்தர் கிட்ட
அண்டா தஞ்சுவர் அவைமிக
நல்ல நல்ல அடியார்க்கே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. அரனொ டரியயன் அம்பிகை
ஆறுமு கன்வள் ளிகுஞ்சரி
அருஞ்கலை வாணி செல்வி
ஆன தேவர் பலரும்
ஆருட்பெரும் கோண குளத்துறை
ஐங்கர னாட்கொண் டஅதனால்
திருவுளம் மகிழ்ந்தணைப் பரவைமி
கநல்ல நல்லசீர் அடியார்க்கே!

8. குண்டுகள் பொழியும் விமானம்
குடிகளை நடுங்கவைக் கும'செல்'
கண்டதும் வெட்டிச் சுட்டுக்
கொல்லும் கனிவிலாப் பாதகர்
வண்டமிழ் அடியேற் குவழங்கு
கோணகு ளனாட் கொண் டஅதனால்
தெண்டனிட் டேசெலு மவைமிக
நல்ல நல்லசேர் வடியார்க்கே!

9. செப்பிள மரணம் பித்துத்
தீரா தகன்ம நோய்கள்
வெப்பொடு குளிருட லூனம்
வெவ்வினை யூழ்கள் தாமும்
ஒப்பிலன் கோண குளப்பதி
யுறையையன் ஆட்கொண் டஅதனால்
அப்படி யண்டா தவைமிக
நல்ல நல்ல அடியார்க்கே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. வாழ்வினி லண்டி நின்று
வருத்தி வாட்டிடர் துன்பம்
ஊழ்வினை பலவு மாகி
உறுவினை வந்துந லியாவணம்
வேழ முகன்கோ ணகுளம்
வீற்றிருப் பானரு ளாசி
வாழ்வு நலம்பெற மிகநல்
நெல்லை வளமு டையார்க்கே!

11. நம்பி யாண்டான் நம்பி
நயம்பெற வருளி யாண்ட
தும்பி முகன்கோ ணகுளம்
துலங்கு மையன் அருளாசி
நம்புக விராயன் மனையாள்
நலம் பெறச் சொன்ன பத்தும்
நம்பினா் ஓதியேத் தினைங்கரன்
நல்லருள் பெற்றுய் வருய்வரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரந்தன் ஐந்தாம் வாய்க்காலின் எழுந்தருளியிருக்கும் வரசித்தி விநாயகர் திருவூஞ்சல் பதிகம்

எண்ணும் பொருள்கருமம் எல்லாம் நிறைத்தெமக்கு
நண்ணும் கலைஞானம் நாவருளும் - கண்ணுதலின்
மண்டத்தான் அண்டத்தான் வண்டத்தான் ஆலமார்
கண்டத்தான் உய்த்தவேழம் காப்பு

## திருவூஞ்சல்

1. ஓங்கார உட்பொருளை யுலகு ணர்த்தும்
ஓதரிய தத்துவத்தின் உண்மை யூட்டி
நீங்காத மெய்யடியார் நெஞ்சத் தென்றும்
நிறைவான திருவருளை நிலைநி றுத்தி
தேங்காலி நிருற்றுத் தென்னை வாழை
செந்நெல்மா செழித்தோங்கு பரந்தன் தென்பால்
ஆங்கான நீர்வழிகால் ஐந்தின் மேவும்
வரசித்தி விநாயகரே ஆடீ ரூஞ்சல்!

2. நலமாரும் நான்மறைகள் தூணாய் நாட்டி
நயமாரும் நாதவிந்து விட்டம் பூட்டி
பொலமாரும் புராணங்கள் பூவாய்ச் சூட்டி
புலமைமிகு ஆகமத்தாற் போர்வை மாட்டி
கலமாரும் வேளாளர் கைதொட் டாட்டக்
கனகமணித் திருவூஞ்சல் மீத மர்ந்து
வலமாரும் பரந்தனிறை ஐந்தாம் வாய்க்கால்
வரசித்தி விநாயகரே ஆடீ ரூஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. ஏற்றமணி கலைகளெழில் விளக்க தாக
எண்ணரிய தத்துவங்கள் கயிற தாக
தேற்றமணி இறைஞானம் திலத மாகச்
செப்பரிய வேதங்கள் திரிக ளாக
நாற்றமலி மண்டபத்தின் நடுவ மைந்த
நவரத்னத் திருவூஞ்சல் மீத மார்ந்து
ஆற்றலணி தெய்வமாக ஐந்தாம் வாய்க்கால்
அண்டியருள் விநாயகரே ஆடீ ரூஞ்சல்

4. விண்ணளந்த வேலவனும் விரும்பிப் போற்ற
வித்தைமிகு நாரதரும் வீணை மீட்ட
மண்ணளந்த மாயவனார் மரபு ரைக்க
மறையவர்கோன் ஓமத்தீ வளர்த்து நிற்க
மண்சுமந்த சென்னியினார் மகிழ்ந்து வாழ்த்த
மகபதியும் சூரியனும் மறைக ளோத
வண்ணமலர் ஊஞ்சலிலே வந்த மர்ந்து
வரசித்தி விநாயகரே ஆடீ ரூஞ்சல்

5. தனமாரும் அடப்பையினைக் குபேரன் தாங்க
சந்திரனும் சூரியனும் தாளம் போட
அனலாரும் அக்னிவாயு கவரி வீச
அன்னையுமை மார்பணைத்து அன்பு கொட்ட
தினமாரும் மணியோசை திசைக ளெட்டும்
திருவருளின் மகிமையினைத் தீட்டி நிற்க
மனமாரப் பரந்தனுயர் ஐந்தாம் வாய்க்கால்
மலரவருள் விநாயகரே ஆடீ ரூஞ்சல்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. பண்ணாளும் பாணர்யாழ் நாதம் மீட்டிப்
பத்திமைசூர் பண்ணமையப் பாடி யாட
மண்ணாளும் காராளர் மலர்கள் தூவி
மனமார ஏத்திவழி பாடு செய்ய
கண்ணாரத் திருக்கோலம் கண்டு கண்டு
கசிந்துருகு கவிராயர் ஊஞ்சல் பாட
மண்ணாரும் பரந்தனூரின் மாண்பு தாங்கும்
வரசித்தி விநாயகரே ஆடீ ரூஞ்சல்

7. கச்சைவடம் முப்புரி நூல் காற்றி லாடக்
காதில்வெண் குழைதோடு கடுக்க னாட
உச்சிமுடி மணிமகுடம் உலுங்கி யாட
உடனிருக்கு மடியார்கள் உருகி யாட
அச்சமிலை! அச்சமிலை யாமி ருக்க
அச்சமேதென் றபயக்க ரங்கள் நீட
மெச்சுபுகழ் பரந்தனூரின் மேவி வாழும்
வரசித்தி விநாயகரே ஆடீ ரூஞ்சல்

8. பாராண்ட தமிழினத்தின் பண்டை யாட்சி
பகிர்ந்தளிக்கு மாறரசைப் பக்க நாடு
நேராகத் தலையிட்டு நிர்ப்பந் திக்க
நெறியிழந்த அரசாரும் நினைவு மாறி
ஊராண்மை தமிழர்க்கு உவந்த ளிக்க
உரிமைக்கொடி யீழமண்மே லுயர்ந்த சைய
வாராளும் பரந்தனொளிர் வாய்க்கால் ஐந்தின்
வரசித்தி விநாயகரே ஆடீ ரூஞ்சல்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. ஆனைமு மானபொருள் ஆடீ ரூஞ்சல்
ஐந்துகரத் தற்புதனே ஆடீ ரூஞ்சல்
வானவர்கள் துயர்துடைத்தா யாடீ ரூஞ்சல்
வல்லசுரன் வலியொழித்தாய் ஆடீ ரூஞ்சல்
மோனத்தருள் முதலே ஆடீ ரூஞ்சல்
முருகனுக்கு முன்னவரே ஆடீ ரூஞ்சல்
வானவரும் தொழுதேத்தும் ஐந்தாம் வாய்க்கால்
வரசித்தி விநாயகரே ஆடீ ரூஞ்சல்!

10. பிரணவம்தேர் பொருளானாய் ஆடீ ரூஞ்சல்
பெருமானார் தேரோடித்தா யாடீ ரூஞ்சல்
சரவணத்தார்க் கருள்புரிந்தா யாடீ ரூஞ்சல்
சஞ்சலங்கள் தீர்ப்பவரே ஆடீ ரூஞ்சல்
அரவணையான் மருகோனே ஆடீ ரூஞ்சல்
ஔவையினைக் கைலைசேர்த்தா யாடீ ரூஞ்சல்
அருவுருவாய் அமர்ந்தருளும் ஐந்தாம் வாய்க்கால்
ஐங்கரனே திரு வூஞ்சல் ஆடீர் ஆடீர்

## வாழி

செந்தமிழும் சிவமதமும்சேர்ந்து வாழி
செய்பயிர்கள் செழித்தோங்கித் தேசம் வாழி
அந்தணர்கள் வேதநெறி அண்டி வாழி
ஆவினங்கள் பால்சொரிந்து பெருகி வாழி
சந்ததமார் இறைநாமம் சாற்றி வாழி
தாய்தந்தை சுற்றத்தார் தாங்கி வாழி
வந்திப்பார்க் கருள்சொரியும் ஐந்தாம் வாய்க்கால்
வரசித்தி விநாயகரே வாழி! வாழி!!

சுபமங்களம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூளாய் அருள்மிகு ஊற்று விநாயகர் திருவூஞ்சல்

## காப்பு

சீராரு மீளவளம் சிறக்க வோங்கு
செந்நெல்வி ளைவயல்கள் தக்கழு கன்ற
பேராரும் கரைச்சிநகர் பெருமை காக்கும்
பெருநதியா யிரணைமடு பெருகி யோடு
பாராரும் ஊற்றங்க ரையின் மேவு
பாசகரன் திருப்பாதம் பணிந்து போற்றி
ஏராரும் திருவூஞ்சல் இனிது பாட
எம்பெருமான் இணைகழல்கள் காப்ப தாமே!

## நூல்

ஓங்கார வுட்பொருளை உணர்த்து கின்ற
ஒளிமயமாய்த் தோன்றுயிர்கள் உய்து வாழ
நீங்காத மலவிருளை நீங்க நீக்கி
நிதமடியார் நெஞ்சகத்தே நிறையப் பக்தி
ஆங்காரு மெய்யடியார் அன்பு கூர
அலங்கரித்த திருவூஞ்சல் மீத மர்ந்து
பாங்காரு மூற்றங்கரைப் பதியின் மேவு
விநாயகப் பரம்பொருளே ஆடீ ருஞ்சல்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராரும் பிரபஞ்சம் பகடை யாகப்
பேசரிய பிரணவமே பீட மாகச்
சீராரும் திருவருளே விளக்க தாகச்
செறிஞானம் கற்பூர தீப மாக
மாராரு மணிமாலை மறைக ளாக
மணங்கமழும் சாம்பிராணி மந்த்ர மாகப்
பாராரு மூற்றங்கரைப் பதியின் மேவு
பாலவிநா யகப்பெருமானே யாடீ ரூஞ்சல்!

நலமோங்கு நால்வேதம் தூண்க ளாக
நயமோங்கு நாதவிந்து கயிற தாகப்
பலமோங்கு பரஞானம் விட்ட மாகப்
பயனோங்கு பசுஞானம் பலகை யாக
நிலமோங்கு உயிரினங்கள் நிகரமாக
நிதம்புரி தானதர்மம் நீற தாக
தலமோங்கு மூற்றங்க ரைசார்ந் தெம்மைத்
தாங்கியருள் விநாயகரே யாடீ ருஞ்சல்!

அருவமென்று முருவமென்றும் அறிய வொண்ணா
அருவுருவு மொன்றாகி யாதி யாகிக்
கருதரிய வாக்குமனா தீத மாகிக்
கனி ஞான வடிவாகிக் கால மெலாம்
மருவிமரு வாதான்ம மலங்கள் போக்கி
மாறாத வானந்த மயமாய்த் தாங்கி
திருமருவு மூற்றங்க ரைசெ ழிக்கச்
சேர்ந்தருளும் விநாயகரே யாடீ ருஞ்சல்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைவிளங்கு மருட்பார்வை கருணை கூரக்
கதியருளும் கரங்களிலே கைலை காண
மலர்விளங்கு திருவடியில் மலர முக்தி
மக்களும் மருணீங்கி மருவ ஞானம்
தலம் விளங்கு தத்துவத்தின் தன்மை தேர்ந்து
சாத்துவிக குணமதனிற் சார்ந்து நிற்க
கலம்விளங்கு முரசைநகர் கமழ்பே ருற்றங்
கரையுறையும் விநாயகரே யாடீ ருஞ்சல்!

விண்ணாரும் வேதநாதன் வேத மோத
விளங்குசந்தி ரசூரியர்கள் விளக்கம் தாங்கப்
பண்ணோடும் தேவரம்பை பாடி யாடப்
பரம்சிவனும் பார்வதியும் பரிவா யாட்ட
மண்ணாரும் முரசைநகர் மக்கள் கூடி
மனமுருகித் திருவடியின் மலரிட் டேத்தத்
தண்ணாரும் பேருற்றங் கரையின் சார்ந்த
தலத்துறையும் விநாயகரே யாடீ ருஞ்சல்!

பொன்னாரும் மணிமவுலி பொலிவா யாடப்
பொருந்துகுழை காதிரண்டின் புருவ மாட
மன்னாரும் புயமிரண்டும் மகிழ்வி னாட
மணங்கமழு மலர்மாலை மார்பி லாட
மின்னாரும் திருவடிகள் மெதுவா யாட
மேனியெங்கும் வெண்ணீறு பூச்ச தாக
நன்னீரா ருற்றங்க ரையின் மேவி
நலமருளும் விநாயகரே யாடீ ருஞ்சல்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதநெறி தழைத்தோங்கி விளங்கச் சைவம்
வேற்றுமதம் மாறுகின்ற விளைவு மாறப்
போதமுறு யோகசாமி அரச சேவை
புரிந்திங்கு வாழ்ந்தகாலை புரிந்து ணர்ந்தே
யாதமொடு யோகபதி கமத்தி னண்டை
அருள்பரவப் புதிதாக அமைத்த கோயில்
காதலொடு விரும்பியிங்கு கலந்திருந்த
கருணைபொழி கணபதியே யாடீ ருஞ்சல்!

பார்காப்பான் கண்ணனன்று பாகப் போரில்
பதியிழந்த பாண்டவர்கள் பக்க மாகப்
பார்த்தீபன் சாரதியாய்ப் பங்கு கொண்டே
பஞ்சவர்கள் வெற்றியீட்டப் பயத்த வாறே
ஊராண்ட தமிழினத்தின் உரிமை மீட்கும்
உறுபோரின் வெற்றி காண உதவி யாண்டு
நீராரு மூற்றங்கே ணிநிறைந் தூற
நின்றருளும் விநாயகரே யாடீ ருஞ்சல்!

சங்கரனார் தன்னுருவே யாடீ ருஞ்சல்
சதுர்மறைகள் உலகீந்தா யாடீ ருஞ்சல்
பொங்குபுனல் ஊற்றமைந்தா யாடீ ருஞ்சல்
போதமிளிர் சடைமுடியா யாடீ ருஞ்சல்
கங்கணங்கள் கலகலென ஆடீ ருஞ்சல்
காராளர் கருமமோங்க ஆடீ ருஞ்சல்
பங்கமின்றிச் செய்பயிர்கள் பலித்தே யோங்கப்
பரம்பொருளே திரு வூஞ்சல் ஆடீ ராடீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழி

சீராரும் தெய்வபக்தி சிந்தை வாழி!
சேரடியார் திருக்கூட்டம் சிறந்து வாழி!
காராரும் கமநிலங்கள் காய்த்து வாழி!
கருமேகம் கனத்தமழை பொழிந்து வாழி!
நீராரும் இரணைமடு நிரம்பி வாழி!
நிறைசெல்வம் பெருகிநாடு நிறைந்து வாழி!
ஊராரும் பேருற்றங் கரையின் மேவு
ஓங்கார ஒளிவடிவே வாழி ! வாழி !!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எச்சரிக்கை

கந்தனுக்கு முன்னுதித்த கணபதியே எச்சரிக்கை!
முந்தைவினை தீர்த்தருளும் முன்னோனே எச்சரிக்கை!
திருவளரும் முரசைநகர் தேவதேவே எச்சரிக்கை!
அருள்நிறைபே ரூற்றங்கரை அமர்ந்தவரே எச்சரிக்கை!
வேண்டுமடி யார்க்கருளும் வித்தகரே எச்சரிக்கை!
காண்டற்கி னியவருட் கற்பகமே எச்சரிக்கை!
ஔவையார்க் கருளீந்த அருவுருவே எச்சரிக்கை!
அச்சது பொடி செய்த அற்புதனே எச்சரிக்கை!
நிறைவிலாதார் நெஞ்சங்கள் நிறைபொருளே எச்சரிக்கை!
கறையிலாத வாழ்வருளும் கற்பகமே எச்சரிக்கை!
இந்திரர்க்காய்க் காவேரி யீந்தவரே எச்சரிக்கை!
பந்தபாசம் நீக்கியருள் பராபரனே எச்சரிக்கை!
பாங்காரும் நீருற்றுப் பாகமைந்தார் எச்சரிக்கை!
ஓங்கார ஒண்பொருளே எச்சரிக்கை! எச்சரிக்கை!

## பராக்கு

ஆதியினா திமுதல்வ னானார் பராக்கு
ஆனைமுக மைந்துகர அழகே பராக்கு
கருதரிய குமுதமலர்க் கழலே பராக்கு
கரடதட விகடகுட வயிறார் பராக்கு
திருமருவு மூற்றங்கரை தேவே பராக்கு
செந்நெல்விளை முரசைநகர்த் திருவே பராக்கு
விக்கினங்கள் தீர்த்தருள் விநாயக பராக்கு
தாவுயிர்கள் தோறுமருட் தந்தார் பராக்கு
வேதங்கள் உலகீந்த விமலன் பராக்கு
தன்னிகரில் லாவருட் தலைவ பராக்கு
முன்னோனெ னவருளும் முதல்வ பராக்கு
பொங்குபுன லூற்றங்கரைப் பொலிவே பராக்கு
தங்கியருள் எங்கும்நிறை தயாளன் பராக்கு
யோகசாமி உவந்தழித்த உருவே பராக்கு
யோகபதி கமத்தெழுந்த ஒளியே பராக்கு
ஓமென்ற பிரணவவுட் பொருளே பராக்கு
ஓதரிய சுடரொளியே பராக்குப்! பராக்கு!!



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மங்களம்

மங்களம் மங் களம்மாவ ரதனுக்கு மங்களம்!
தங்கியருள் ஊற்றங்கரைத் தயாளனுக்கு மங்களம்!
ஐந்துகர ஆனைமுக ஐயனுக்கு மங்களம்!
கந்தனுக்கு முன்னுதித்த கணபதிக்கு மங்களம்!
திருமறைகள் உவந்தளித்த தேவனுக்கு மங்களம்!
திருவருளும் சேவடிக்கு மங்களம்! மங்களம்!!
சங்கரனார் தேரோடித்த தனையனுக்கு மங்களம்!
மங்களம் மங்களம் செய செய மங்களம் மங்களம்!

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூரான் பேரருளை நம்பு

1. புள்ளிமயி லேறிப் புவிவலம்வந் தானடியார்க்(கு)
அள்ளிக் கொடுக்கும் அருளினனாய்-வள்ளியுடன்
நல்லூர்த் தலமிருந்து நாளும் அருள் புரியும்
வல்லானை வந்து வணங்கு

2. சேவற் கொடி யேற்றிச் சீர்விழாச் செய்கின்றான்
பாவ வினைகள் பறந்தோட- ஆவலதாய்க்
கூடிநல் லூர்த்தலம் கும்பிட் டவனருளை
நாடிப் பெறுமின் நயந்து.

3. புள்ளிமயில் மீதுநல்லூர் போந்து விளையாடும்
வள்ளி மணாளன் வடிவேலன் - உள்ளார
அல்லும் பகலும் அவன்நாமம் உச்சரிக்க
தொல்லைவரா காப்பான் துடைத்து

4. போற்றுவார் வல்வினையைப் போக்கி யருளீந்து
ஏற்றுவா ரைக்கயிலை ஏற்று நல்லூர்-வேற்கோட்டம்
நேரம் தவறா நிகழும் மணி யொலியால்
ஊரே சிறக்கு துயர்ந்து

5. சீரான கல்விஞானம் செல்வப் பொருளனைத்தும்
நேராக முன்வந்து நிற்குமே - ஓராங்கு
நல்லைக் குமரவேள் நற்பாதம் போற்றுவார்க்கு
அல்லா வினைகள் அகன்று.

6. கரகங்கள் வீதியெலாம் காவடியா டன்பர்
அரகரவோ சைக்ககம கிழ்வான்-பரவசமாய்க்
கற்பூ ரவொளியிலே காட்சிதரும்- நல்லூரான்
அற்புதத்தைக் காணலாம் அங்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. நல்லைநகர் வீற்றிருந்து ஞான ஒளிபரவ
அல்லும் பகலும் அருள்மயமாய்த்- தொல்லைதரு
பொல்லா வினைபனைத்தும் போக்கியடி யார்க்கருளும்
நல்லூரான் பேரருளை நம்பு.

8. [illegible]
புள்ளி மயிலேறிப் போந்தங்கு- வள்ளலெனப்
பொல்லா வினையாவும் போக்கியருள் ஆளுகின்றான்
நல்லைப் பதியினிலே நாளும்

9. நல்லைப் பதிநாடி நாளும் தொழுவாரில்லம்
தொல்லைப் படைகள்முன் தோணாதே- 'செல்'லும்
திசைமாறிச் செல்லுமே தீங்கொன் றிலையுள்
அசையா அவனடி அண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கே தீச்சரப் பற்று

1. மங்கையும் மதியும் பாம்பும்
மணங்கமழ் கொன்றை சூடும்
அங்கண! அருவுரு வாயே
அடியவர் தம்மை யாட்கொள்
அங்கணி இடமாய்ப் புவியின்
அருட்பெருந் தலத்த மர்ந்த
செங்கயல் வாவி சூழ்கே
தீச்சர சிவனே போற்றி

2. சங்கரா இறைவா சாம்பு
சதாசிவா அந்தி வண்ணா
பொங்கர நீறணி புண்யா
புங்கவி இடமாய்த் தோன்றி
எங்களை இரட்சித் தாளும்
ஈசனே! மண்சு மந்த
திங்கள ணிசெஞ்ச டைக்கே
தீச்சர சிவனே போற்றி

3. பாரொடு விண்ணாய் எங்கும்
பரந்து வியாபித் தருளி
ஊரொடு உயிர்கள் யாவும்
ஓரிணை சக்தி யாலே
சீரொடு படைத்துக் காத்தே
செகமெலாம் இயங்க வைக்கும்
ஈரொரு வடிவாய்க் கலந்த
இறைவா திருக்கே தீச்சரனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. ஆடல ராகிக் கூத்து
ஆடிநீ சுடலை நின்றாய்
ஓடதைக் கையி லேந்தி
ஊரெலாம் சுற்றி வந்தாய்
பாடலின் குற்றம் கேட்டுப்
பண்டமிழ்ச் சங்கம் சென்றாய்
தேடியும் அயன்மால் காணாத்
திருக்கே தீச்சர சிவனே!

5. ஆற்றினை யடைக்கச் சென்றே
அடியுதை பெற்றாய் அப்பா
சோற்றினை யுண்ணச் சென்று
தொண்டனின் மகனைக் கவர்ந்தாய்
வேற்றுரு வாகி வந்து
வேதியன் அடிமை யென்றாய்
ஆற்றினை அன்பர்க் காயே
அம்பலத் தாடும் சிவனே !

6. போற்றிடும் அடியார் உள்ளம்
புரிந்தாட் கொள்ள நீயே !
மாற்றுரு வாகச் சென்று
மனநிலை யாயுங் காலை
தேற்றம தான சிந்தை
திறலுறும் மற்றை மாறும்
வேற்றுமை கண்டே யன்பு
விளைத்திடும் சிவனே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. பொல்லா வினையேன் உனைநான்
புகழு மாறொன் றறியேன்
அல்லா வினைகள் போக்கி
யணைத்தாட் கொள்வை நானும்
நல்லா னாகிச் சமய
ஞானம் பரப்ப எங்கும்
வல்லாய் பாலா வியின்பால்
மருவிய சிவனே போற்றி

8. தேவருக் கந்நாள் அசுரர்
செய்ததை போல இன்றும்
காவலர் கொடுமைக் காளாய்க்
கலங்கிடும் தமிழர் துயரைத்
தாவரன் நீயே யல்லால்
தாங்கு வாரில்லை யப்பா
தேவருக் குதவ முருகன்
திருவுளங் கொண்ட சிவனே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடும் பயிர்கள் நயக்க

1. போட்ட நெல்லோ முளையாமற்
புவியிற் சும்மா கிடக்கிறதே
தேட்டம் வீணே செலவாச்சு
செய்வ தென்ன மேலுமினி
நாட்டிற் கலகம் ஒருபக்கம்
நாடு ஆள்வார் மறுபக்கம்
கூட்டில் வாழும் குரங்கானோம்
கோண குளத்துக் கணபதியே !

2. ஆட்டம் காணா தெம்வாழ்வில்
அண்டிக் காத்து அருள்சொரிந்தே
போட்ட விதைகள் கருவாகிப்
பொருந்த முளைகள் வயலெங்கும்
வாட்ட மின்றி வளர்ந்தோங்கி
வளமாய்ச் செழித்தே விளைவாக
கூட்டி வைத்தல் உன்கடனே
கோண குளத்துக் கணபதியே

3. மாடும் கலப்பையும் இல்லாமல்
மண்ணை யுழுது பயிரிடவோ
ஓடும் இயந்திர உதவிநம்பின்
உதவா திந்த மழைகாலம்
மேடும் பள்ளமும் ஒன்றாக
வெள்ளம் மேவிபோ டுதாறாக
நாடும் பயிர்கள் உண்டாக
நயமாய் இறைவா அருள்வாயே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. பாட்டுப் பாடி உன்மீது
பலனைப் பெற்றேன் பலகாலும்
மீட்டும் மீட்டும் துதிபாடி
வேண்டி நிற்பேன் இனிமேலும்
நாட்டு நிலைமை காணாயோ
நம்மிடர் இனியும் போக்காயோ
கொட்டும் மழையைக் குறையாயோ
கோணை குளத்துக் கணபதியே !

5. அல்லும் பகலும் உன்னடியே
அண்டித் துதிக்கும் அடியேன்மேல்
எல்லாம் வல்ல இறைவாநீ
ஏனோ தானோ என்றிருப்பின்
சொல்லத் தெய்வம் வேறுண்டோ
துணைக்கு யாரும் வருவாரோ
கொல்லும் படைகள் கொடுமைநீக்காய்
கோணை குளத்துக் கணபதியே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோணங்குள விநாயகர் முறையீட்டுப் பதிகம்

1. நிலையில்லா வுடலை வளர்க்க
   நிதமும் வியர்வை சிந்தி
விலையாப் பெற்ற 'ருக்ரர்'
   வீணர் பறிக்கக் கண்டும்
நிலையாய் மௌனித் திருப்ப
   சிறப்போ சித்தங் கூர்ந்தக்
கொலையார் திருப்பிக் கொடுக்க
   அருள்கோண குளக் கோவே

2. செய்வ தறியேன் இந்தத்
   தேகம் இருக்கும் வரையான்
பொய்க ளாவுவஞ் சமிவை
   போக்கிப் புவியில் வாழக்
கையில் பணமில் லையேற்
   கணமும் நோக்க ருலகார்
தெய்வம் நீயே யல்லால்
   திருவ ருள்செய யாரே !

3. தெய்வம் நீயே யென்னத்
   தினமும் புகழ்ந்து பாடுவ
பொய்ய லவென இப் பூ
   புரிந்துனைப் போற்று மாறு
செய்வை செய்வை திருவருள்
   நோக்கு 'ருக்ரர்' கிடைக்க
வையம் புகழ்கோ ணகுளம்
   வாழே ரம்ப மூர்த்தியே!



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

4. பொல்லா னேனும் நாளும்
பொழுதுமுனைப் போற்றும் நாயெனை
நல்லா னாக்கி ஞானம்
நல்கிக் காப்பநின் கடனலால்
அல்லா னெனவெ றுக்கின்
ஆரிடம் சென்று முறையிட
[illegible]
குளம்வா ழேரம்ப மூர்த்தியே !

5. அண்டர்க் கா கக்க யமுக
அசுரனை அழித்த தேவே
கண்ணிய மின்றி மக்கள்
கைப்பொருள் யாவும் பறித்தே
எண்ணி லாத்துன்பங் கள் தந்
தெக்கா ளமிடும் எத்தர்
பண்ணி டுகொடுமை பார்த்தும்
பாராமுக மேன்தா னின்றே !

6. எத்தனை காலம் மக்கள்
இத்தனை துன்பம் சகிப்பர்
பெத்தவர் பிள்ளை காக்கப்
பேதையர் உடமை காக்கச்
சித்தமும் கலங்கிப் புலம்பித்
தெருவிலில் அலையும் காட்சி
அத்தனே காண்பாய் காண்பாய்
அனைத்தையும் படைத்தாய் காணே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. உலுத்தரின் கூட்டம் தாமே
ஊரினை யாள எண்ணிக்
கொலைக்கள மாக நாடு
கொடும்பகை மூளச் செய்து
வலுக்கட் டாயமாய்ப் பிடித்தே
மக்களை வதைத்து வருத்திக்
கொல்லு கின்றார்கள் அந்தோ !
கோண குளம்வாழ் கோவே !

8. ஆட்சியைத் தாமே யேற்று
அவனியைக் காப்போ மென்றே
சூட்சியார் வலையிற் சிக்கி
சுதந்திர வாழ்வைச் சிதைப்பார்
வீட்சியைத் தழுவுவ ரன்றி
வெற்றியே காண மாட்டார்
ஆட்சியை நல்லார் பற்ற
ஐங்கரா அருளிக் காவே !!

9. வீட்சியின் விளிம்பில் நிற்கும்
வெறிய ர்கொட் டமடங் கவருள்
ஆட்சியைச் செலுத்தி 'ருக்ரர்'
அகந்தனைச் சேர வைக்கும்
காட்சி கண்டுகண்ட டியனேன்
கரங்குவித் தேத்தி நின்மேல்
மீட்சியென் பதிகம் பாடும்
மீளா அடிமை அடிமையே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. அன்றுநீ அணைத்த ருளாண்டே
அடியனைக் காத்த வாறே
இன்றுமே காப்பாய் ! காப்பாய் !!
ஈசனே காப்பாய் ! காப்பாய் !!
என்றுமே நின்க ழலேத்தும்
எளியனுக் கிரங்கிக் காப்பாய்
குன்றுதோ றுறைகுகர்க் குதவு
கோண ஒளி நாயகனே !

11. நம்பிக் கருளித் திருமறைகள்
நயக்க வைத்தா யுலகாரும்
தம்பிக் குதவிக் குஞ்சரமாய்ச்
சபரன் மகளைச் சேரவைத்தாய்
செம்பைக் கவிழ்த்தே ஆறாக்கித்
தேவேந் திரன்பூங் காகாத்தாய்
நம்பி யிரந்தேன் எளியேனும்
நலமா யருள்வாய் அருள்வாயே !

12. முன்னை நம்பிக் கருளினை
முதலே பொய்யோ ! பொய்யோ !!
அன்னை ஔவைக் கருளினை
அதுவும் பொய்யோ ! பொய்யோ !!
பின்னை அகத்தியர்க் கருளிய
பிள்ளைநீ அலவோ ! அலவோ !!
இன்னும் மௌனம் மௌனமோ
இறைவ அருள்வாய் ! அருள்வாயே!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணிக்கன்குளம் விநாயகர் திருவூஞ்சல்

## காப்பு

சீர்பூத்த சைவமதம் சிறப்புற் றோங்கித்
திகழ்வன்னி வளநாட்டிற் கொருசார் பாகப்
பார்பூதத் பணிக்ககுளப் பதியின் மேவிப்
பரிபாலித் தருள்சித்தி விநாய கர்மேல்
ஏர்பூத்த ஊஞ்சலிசை இனிது பாடி
எம்பெருமான் திருவடிகள் இறைஞ்சி யேத்த
கார்பூத்த கோணகுளக் கரையு றையும்
கடம்பூத்த கணபதிதாள் காப்ப தாமே !

## நூல்

1. ஓங்காரத் தெழுசக்தி உலகி யங்க
உந்துசக்தி யாகுமெனும் உண்மை கூறும்
நீங்காத திருவருளின் நிறைவ தாகி
நின்றுலகை நெறிப்படுத்து நிமலன் கோவில்
ஆங்காரு மடியார்கள் அன்பு கூர
அலங்கரித்த திருவூஞ்சல் மீத மர்ந்து
பாங்காரும் பணிக்ககுளப் பதியின் மேவு
பரசித்தி விநாயகரே ஆடீர் ஊஞ்சல்

2. பாமேவ ஆகமங்கள் பலகை யாகப்
பயன்மேவு நால்வேதம் படைய லாக
பூமேவ புராணங்கள் புலமை யாகப்
பொருந்துகலை எண்ணைட்டும் புட்ப மாக
மாமேவு உபநிடதம் மணிக ளாக
மருவுபிர ணவமாகு மஞ்ச மேறித்
தேமேவு பணிக்ககுளம் செழிப்புற் றோங்கச்
சித்திவிநா யகமுதலே ஆடீர் ஊஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. ஆர்த்தபிறப் பகலாப்பொ றிமலம் ஆன
ஐந்துமூன்றும் அண்டியுளம் அடியார் ஆன்மா
போர்த்தும்பி றவிக்கடலுட் பிணித்த மிழ்த்தா
பேறுதரு திருவடிக்கீழ்ப் பிணைத்த ணைக்கும்
மூர்த்தியெனத் தேவரொடு முகுந்த னாரும்
முதல்வணக்கஞ் செலுத்துகின்ற முதன்மைத் தேவாய்
சீர்த்திமிகு பணிக்ககுளச் சேர்வு றையும்
சித்திவிநா யகமுதல்வ ஆடீர் ஊஞ்சல்

4. அரியயனார் மலர்சிந்த அமரர் கோனும்
அழலவனும் அயல்மேவி அடப்பை தாங்க
அருள்நந்தி கைப்பிரம்பாய் அவைய டக்க
அமரரொடு முனிவர்கள் ஆடிப் பாட
இரவிசசி எழிலாரும் தீப மேந்த
இறையவனார் இறைவியொடும் இனிது வாழ்த்த
திருவளரும் பணிக்ககுளம் சேர்ந்து வாழும்
சித்திவிநா யகப்பெருமான் ஆடீர் ஊஞ்சல்

5. விண்ணாரும் நாரதர்கை வீணை ஒற்ற
வேதனொடு நாமகளும் வேதம் ஓத
பண்ணாரத் தேவரம்மை பாடி ஆடப்
பணிக்ககுளம் வாழடியார் பரவி யேத்த
கண்ணாரத் திருக்கோலம் கண்டு கண்டு
கவியுரைத்த கவிராயர் கசிந்து போற்ற
மண்ணாரும் பணிக்ககுளம் மருவி வாழும்
வரசித்தி விநாயகரே ஆடீர் ஊஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. கலையாரும் திருமுகம்நேர் கருணை சொட்ட
கதியருளும் கைகளிலே ககனம் கிட்ட
அலராரும் திருவடிக்கீழ் அலர முக்தி
அண்டமெலாம் தொந்தியிலென் அடக்கம் காட்டி
நிலையாரும் சைவமதம் நீடு ஓங்க
நெஞ்சகத்தே இறையன்பு நிறைவு கொள்ள
அலையாரும் பணிக்ககுளம் அண்டி வாழும்
அருட்சித்தி விநாயகரே ஆடீர் ஊஞ்சல்

7. அருத்தமுள சென்னிமுடி ஆரம் மின்ன
அபயமளி கரவிரலின் ஆழி துன்ன
பொருத்தமுள முத்தாரம் மார்பில் என்னப்
போதஞானம் திருவடியிற் புலர்ந்து மன்ன
விருத்தமுள செந்தமிழ்வாய் விரும்பி யுன்ன
வேதமந்ரம் வேதியர்கள் விரித்துப் பன்ன
திருத்தியுள பணிக்ககுளம் சேர்ந்து றையும்
சித்திவிநா யகப்பொருளே ஆடீர் ஊஞ்சல்

8. பாராளும் அரசர்நீள் பகைமை நீங்கிப்
பண்டையாட்சி தமிழருக்குப் பகிர்ந்த ளிக்க
ஏராரும் தமிழினத்தின் கொடிகள் எங்கும்
இசைவாக நின்றசைய ஈழ மண்மேல்
சீராரும் சைவமதம் சிறப்புற் றோங்கிச்
செகமெல்லாம் தமிழ்மொழியின் சீர்த்தி மேவ
பேராரும் பணிக்ககுளம் பெருமை பேணிப்
பிறங்குசித்தி விநாயகரே ஆடீர் ஊஞ்சல்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. அருளொழுகு சென்னிமுடி அசைந்தே ஆட
அமரரொடு முனிவர்கள் அணியாய் ஆட
புருவமொரு நயனங்கள் பொருந்தி ஆட
போதமலி செஞ்சடையும் பொலிவாய் ஆட
அருகமர்ந்து மையவளும் ஆட்ட ஆட்ட
அருமறையா னமைந்தவூஞ்சல் ஆட ஆட
திருவளரும் பணிக்ககுளம் செழுமை நீடச்
சித்திவிநா யகப்பெம்மான் ஆடீர் ஊஞ்சல்!

10. ஐங்கரனே அருளுருவே ஆடீர் ஊஞ்சல்
அரிசாபம் விமோசனித்தாய் ஆடீர் ஊஞ்சல்
பொங்குபுனல் சடைவைத்தாய் ஆடீர் ஊஞ்சல்
பொதியமுனிக் கருளிநின்றாய் ஆடீர் ஊஞ்சல்
சங்கரனின் தேரொடித்தாய் ஆடீர் ஊஞ்சல்
சஞ்சலங்கள் தீர்ப்பவனே ஆடீர் ஊஞ்சல்
திங்களணி பணிக்ககுளம் மேவு சித்தி
விநாயகரே திருவூஞ்சல் ஆடீர் ஆடீர்

## வாழி

11. காராளர் விளைநிலங்கள் காய்த்து வாழி !
காலமெலாம் தெய்வசிந்தை கனிந்து வாழி !
நீராரும் பணிக்ககுளம் நிரம்பி வாழி !
நீதிநெறி மனிதநெஞ்சம் நிறைந்து வாழி !
தீராத வினைகளெலாம் தீர மக்கள்
சிந்தைநாளும் அகிம்சைவழி திளைத்து வாழி !
பாராரும் பணிக்ககுளப் பதியின் மேவு
பரசித்தி விநாயகரே வாழி ! வாழி !!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எச்சரிக்கை

பிரணவப் பெரும்பொருளே எச்சரிக்கை ! எச்சரிக்கை !!
சரவணன் தமதண்ணல் எச்சரிக்கை ! எச்சரிக்கை !!
பாரதம் மலைவரைந்தார் எச்சரிக்கை ! எச்சரிக்கை !!
பாவங்கள் தீர்த்தருள்வார் எச்சரிக்கை ! எச்சரிக்கை !!
பரமனார் தேரோடித்தார் எச்சரிக்கை ! எச்சரிக்கை !!
பரந்தாமற் கருள்புரிந்தார் எச்சரிக்கை ! எச்சரிக்கை !!
பாரார் பணிக்ககுளம் பழனஞ்சூழ் பதியமர்ந்த
சீரார் சித்திவிநாயகர் எச்சரிக்கை ! எச்சரிக்கை !!

## பாராக்கு

ஆதிமுத லான பொருளே பராக்கு
ஔவையைக் கைலைசேர்த் தாண்டார் பராக்கு
பாதிமதி சடைவைத்த பண்ணவன் பராக்கு
பாவவினை போக்கி யருள்பரன் பராக்கு
சீதப்புனல் வயல்சூழ் பணிக்ககுளம்
சித்திவி நாயகர் பராக்குப் பராக்கு

## மங்களம்

மங்களம் மங்களம் மாமுகற்கு மங்களம்
எங்குமி றைந்தருள் ஈசனுக்கு மங்களம்
ஐங்கர ஆனைமுக அழகனுக்கு மங்களம்
அமரர்குறை களைந்த ஐயனுக்கு மங்களம்
திருமுறை உலகளித்த தேவனுக்கு மங்களம்
கரவிலா ருளமாரும் கணபதிக்கு மங்களம்
பொங்குநீர் பணிக்ககுளப் போதனுக்கு மங்களம்
மங்களம் மங்களம் சுபமங்களம் மங்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவோங்கு வன்னிவள நாட்டின் தென்பால்
சிறந்தோங்கு பணிக்ககுளப் பதியின் மேவு
அருளோங்கு சித்திவிநா யகப்பெம் மான்மேல்
அன்போங்கு இராசையன ளித்த பத்தும்
இருளோங்கு மும்மலத்தின் இடர கற்றி
இசைவான பக்திநெறிக் கிட்டுச் செல்லும்
பொருளோங்கு ஊஞ்சலிதைப் புகலக் கேட்பார்
பொன்னுலக வாழ்வுமிகப் பொருந்து வாரே!

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா வைரவ புளியங்குளம் ஆதிவிநாயகர் திருப்பள்ளிஎழுச்சி

ஓங்காரத் தொண்பொருளாம் ஒளிக்குள்ளே
 ஒளியாகி யோங்கு சக்தி
தேங்காத நிலையருளும் ஆனந்த
 சிற்சக்தி யாக ஆன்மா
நீங்காத திருவருளின் நிலைக்கருளும்
 நீள்வைரவ புளியங் குளமேற்
பாங்காரும் ஆதிவிநா யகர்பாத
 பங்கயங்கள் போற்றி ! போற்றி !!

### நூல்

1. போற்றியெம் பிரவணவப் பெருந்தகைப் பொருளே !
 புலர்ந்ததிப் புவியிருள் அகன்றத டியார்கள்
ஏற்றிநின் திருவருள் இறைஞ்சியுள் ஏத்த
 ஏற்றகா லமிதெனக் குழுமினர் உழவர்
மாற்றுயர் தானியம் மலிவுற விளையும்
 வைரவ புளியங்கு ளாதியைங் கரனே !
தோற்றிடு வினையெலாம் துடைத்தரு ளாளும்
 தும்பிமா முக! பள்ளி எழுந்தரு ளாயே !

2. கதிரொளி படர்ந்ததிக் ககனவெ ளியெங்கும்
 காரிருள் கலைந்தொளித் தாரகை கவிய
புதுவித உளத்தொடு பொழிமலர்க் கையாய்ப்
 போந்தனர் அடியருன் பூங்கழல் போற்ற
மதுவிழி தாமரை மலர்ந்லர் கின்ற
 வைரவ புளியங்கு ளாதியைங் கரனே!
விதிவச முறுதுயர் விலக்கருள் வல்ல
 விநாயக! திருப்பள்ளி எழுந்தரு ளாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. கூவின கோழிகள் குரலிசை கொடுத்த
குயிலினம்! கூடின குருகுகள் கழனி
ஆவினம் பால்சுரந் தம்ம! வென் றலறி
அழைத்தன சேயினை அணைத்துண வூட்ட
வாவிகொள் வளநகர் வவுனியா மேவு
வைரவ புளியங்கு ளாதியைங் கரனே!
பாவியெ மையும ணைத்தருள் ஆளும்
பாகக ரா! பள்ளி எழுந்தரு ளாயே !

4. பண்ணிசை வாத்தியம் பயிலுனர் ஒருபால்
பாடலொ டாடல்செய் பாவையர் ஒருபால்
விண்ணகத் தேவரர் விஞ்சையர் ஒருபால்
வேதமந் திரமுறை வேதியர் ஒருபால்
மண்ணகத் தார்க்குயர் வாழ்வளி வன்னி
வைரவ புளியங்கு ளாதியைங் கரனே!
எண்ணிலர் கூடினர் எழில்முகங் காண
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே !

5. படைப்பதும் காப்பதும் பரிவிலா தன்பர்
பவவினை நீக்கிநின் பேரருட் பயனை
அடையவொட் டாதுளம் அண்டியு லைப்ப
தானமும் மலவிருள் போக்கிய ருள்வாய்
மடைநிறைந் தோடிநீர் மருதஞ்செ ழிக்கும்
வைரவ புளியங்கு ளாதியைங் கரனே !
கடையவ ரென்னினும் கருணைகாட் டவல்ல
கற்பக ! திருப்பள்ளி எழுந்தரு ளாயே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. ஆதியும் அந்தமும் நடுவுமில் லாயுன்
அருள்விளை யாடலை அமரரும் அறியார்
ஏதமில் அடியவர்க் கெளியனாய்த் தோன்றி
இன்னருள் புரிந்தவர் இடரினைத் துடைக்கும்
மாதொரு பாகனார் மகிழ்ந்தயல் உறையும்
வைரவ புளியங்கு ளாதியைஞ் கரனே !
ஏதையெம் பணிகொள ஏற்றவை யருளும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே !

7. ஆட்டுவ ரொருவரின் ஆதர வின்றி
ஆடுமோ பொம்மையும்தானதாய் அந்த
ஆட்டிடும் சக்திய தாகநின் றுலகின்
அணுமுதல் அனைத்தையும் ஆட்டுவான் நீயாம்
மாட்சிகொள் பண்டார வன்னியாண் டிருந்த
வைரவ புளியங்கு ளாதியைங் கரனே !
நாட்டிலு றுபகைநீங் கநயம ருளும்வி
நாயக! திருப்பள்ளி எழுந்தரு ளாயே !

8. இந்திரன் தவவழி இனிதுனை வேண்ட
இளைத்தபார் நந்தனம் இரட்சிக்க விரும்பி
தந்திரக் காகமாய்த் தமிழ்முனி கலசம்
சரிந்துநீள் காவிரி தரணிபா யவைத்தாய்
வந்தவர்க் கடைக்கல வாழ்வளி வன்னி
வைரவ புளியங்கு ளாதியைங் கரனே!
எந்தைநின் திருவிளை எண்ணில புகழ
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே!

9. 'செல்' அடி தாங்கொணாச் சேர்மனை சுற்றம்
தேடிய தேட்டமூர் அனைத்துமே விட்டு
அல்லலுற் றடியவர் அகதியாய்ப் பலரும்
அடைக்கலம் நீயென ஆலயம் வந்தார்
புல்லென வைத்தபோ ரும்பொலி சொரிநெற்
புலம்வைர வபுளியங் குளாதியைங் கரனே!
அல்லரென் றெமைத்தள்ளா அணைத்தருள் ஆளும்
ஆரமுதே! பள்ளி எழுந்தரு ளாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. விண்ணகத் தார்முதல் மேவுல கனைத்தும்
விழைந்துனை முதற்றொழு விழுத்தகை யுடையாய்
எண்ணகத் தேதுசார் எண்ணங்கள் தோன்றி
இருவினை மும்மல இருளைமை அழுத்தா
கண்ணகத் தடிமைக விராயனும் திருவார்
காட்சிகண் டுகண்டுபா டித்தொழ அருளாய்
மண்ணகம் மலர்வைர வளியங் குளாதி
மகாவிநா யக! பள்ளி எழுந்தரு ளாயே!

சுபமங்களம்

## ஆலய மாமணி யோசையிலே

### பல்லவி

ஆலய மாமணி யோசையிலே - தேவ
அருள்மொழி யெங்குமே கேட்குதம்மா

### அனுபல்லவி

சாலவே அங்கு யென்னைத் தேவகுரல்
சந்நி தான மழைக்குதம்மா - அந்த(ஆலய)

### சரணம்

ஆராத பக்தி யண்டி யெனைத்
தீராக்கா தல்தந்தே தேவனடி
வாராய்நீ வாராயெ னவலிந்தே
யோராங்கு மணியோசை யொலிக்குதம்மா-அந்த(ஆலய)

சாராதே சஞ்சலங்கள் சற்குருவாம்
பேராளன் பேரருள் பெற்றுய்ய
நேராக ஓடோடி நித்தனடி
சாராதி னித்தங்க மாட்டேனம்மா -அந்த(ஆலய)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org